பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆனி 9 றஜப் 5 இதழ்: 132
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23-6-77

# பிரதமருடன்பேசியதுஎன்ன?

## விபரம் வெளியிட மனோகரன் மறுப்பு!

### சென்னை திரும்பியதும் எம். ஜி. ஆரைச் சந்தித்தார்

சென்னை, ஜூன் 22

புது டில்லியில் பிரதமர் திரு. மொராார்ஜி தேசாய், உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங், ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர், செயலாளர் திரு தேஷ்முக், பாண்டிச்சேரி கவர்னர் குல்கர்ணி ஆகியோருடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் பற்றிய விபரங்களை வெளியிட அ. இ. அ.தி.மு.க. துணைச்செயலாளர் திரு. நாஞ்சில் மனோகரன் இன்று சென்னையில் மறுத்து விட்டார்.

புதுடில்லி சென்றுவிட்டு திரு. மனோகரனும், திரு. பாலபழனூரும் இன்று சென்னை திரும்பினார்கள்.

**எம். ஜி. ஆருடன் சந்திப்பு**

சென்னை திரும்பியதும் இவர்கள் அ. இ. அ. தி.மு.க. பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனைச் சந்தித்து புதுடில்லி பேச்சுவார்த்தை விபரங்களை வெளியிட்டனர்.

பின்னர் நிருபர்கள் மத்தியில் பேசிய திரு. மனோகரன் தாம் புதுடில்லியில் பிரதமர், உள்துறை அமைச்சர், ஜனதா கட்சிதலைவர் செயலாளர் முதலானோரை சந்தித்து தமிழ்நாடு, பாண்டிச்சேரி அரசியல்

[8ம் பக்கம் பார்க்க[

# "சர்வஜன வாக்கெடுப்பு;

# அமைதி முக்கியம்

## ஆத்திரமூட்டினாலும்; அதற்கு இடமளியாதீர்"

### திரு. கதிரவேலுப்பிள்ளை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியாழன்

"தமிழ் ஈழம் "மீண்டும் அமைவதற்காக தமிழ்பேசும் மக்களின் மனப்பான்மையைத் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டும் நோக்கத்துடன் இம்முறைத் தேர்தலை சர்வஜனவாக்கெடுப்பாகக் கணிக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகோள் விடுத்து அந்த நோக்கத்துடனேயே தோகுதியில் போட்டியிடுகின்றது. இச்சமயத்தில் எந்தப் பக்கத்தில் எவராவது அமைதியைக் குலைத்து வன்செயல்களுக்கு இடமளித்தால் அது எமது நோக்கத்தையே பாதிப்பதாக இருக்கும். எந்தச் சக்திகள் பின்னணியிலிருந்து ஆத்திரமூட்டினாலும் அமைதியைப் பேணிக்காக்க வேண்டியது தமிழ் மக்களினது குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியினரது கடமையும் பொறுப்புமாகும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரும் முன்னாள் கோப்பாய்ப் பிரதிநிதியுமான திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை ஓர் அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் பிரசாரங்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பகுதியில் வன்முறைச் செயல்கள் அதிகரித்து வருவதாகச் செய்திகள் சில கூறுகின்றன. இந்தச் செயல்களில் யார் ஈடுபடுகிறார்கள் என்பது ஆராய வேண்டியவிஷயம்.

இம்முறை நடைபெறும் தேர்தல் தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாய்ந்தது. 'தமிழ் ஈழம் பெறும் இலட்சியத்துக்கு தமிழ் பேசும் மக்களின் சம்மதத்தைப் பெறும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே இதைக் கருதுகின்றோம். எனவே இந்தத் தேர்தல் அமைதியாக நடைபெறவேண்டியது அவசியம்.

அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய ஆத்திரமூட்டும் செயல்களில் யாரும் ஈடுபடக் கூடாது. அப்படி யாராவது விஷமத்தனமான நோக்கத்துடன் ஈடுபட்டால் அதையும் தவிர்த்து நடக்க வேண்டியது தமிழர் கூட்டணியின் வேட்பாளர்களினது பொறுப்பும் கடமையுமாகும்'

இவ்வாறு திரு. கதிரவேலுப்பிள்ளை தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## "தமிழ் ஈழத்தில் தமிழன் தமிழனை ஆளமாட்டான்"

### திரு. பொன்னம்பலம் கூறுகிறார்

யாழ்ப்பாணம், வியாழன்

"தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கோருகின்ற தமிழ் ஈழம் இங்கு அமைக்கப்பட்டால் தமிழனைத்தமிழன் ஆளமாட்டான் வன்செயல்கள் தான் தமிழனை ஆளும்"

இவ்வாறு ஆனைப்பந்தி தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியினரால் திரு. எஸ். கைலாசபிள்ளை தலைமையில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் கலந்து உரையாற்றிய தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவரும், யாழ்ப்பாணத்தொகுதி அபேட்சகருமான திரு ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார். அவர் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது: "தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மேடைகள் தோறும் ஒற்றுமை பற்றிப் பேசி வருகிறார்கள் ஆனால் அந்த ஒற்றுமையைக் குலைப்பவர்கள் அவர்களே. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற அபேட்சகர்கள் அறிமுகக் கூட்டத்தில் சகல தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர்களும் சத்தியப்பிரமாணம் எடுக்க வேண்டும் என்று கூறி சகல அபேட்சகர்களும் அமரர் செல்வநாயகத்தைத் தகனம் செய்த இடத்திற்குச் சென்று சத்தியப்பிரமாணம் எடுக்க முயன்ற சமயம் எமது ஆதரவாளர்கள் அவர்களிடம் நீங்கள் சத்தியப்பிரமாணம் எடும்பதாக இருந்தால் பருத்தித்துறைக்குச் சென்று அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தைத் தகனம் செய்த இடத்தில் சத்தியப்பிரமாணம் எடுங்கள் எனக் கூறித் தடுத்தனர். இதனால் அவர்கள் பின்னர் கூட்ட மேடைக்குச் சென்று ஒருவர் சொல்ல மற்றவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அப்போது ஒரு இடத்திலாவது அமரர் ஜி. ஜி. யின் பெயர் இடம் பெற்றதா? இவர்கள்தானா ஒற்றுமையைப் பற்றிப் பேசுகிறார்கள். அண்மையில் கோப்பாய் தொகுதியில் நடைபெற்ற ஒரு கூட்ட அறிவித்தலில் ஒரு பக்க மூலையில் அமரர் வன்னியசிங்கத்தின் படமும் மறுபக்க மூலையில் அமரர் செல்வநாயகத்தின் படமும் மட்டுமே

[8ம் பக்கம் பார்க்க]

## 'வன்செயல்கள்'

### திரு. யோகேந்திரா அறிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிடும் 'தமிழ் மக்கள் இயக்க வேட்பாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி விடுத்துள்ள ஓர் அறிக்கையில், வேலணை வேல்முருகன் கோயில் சமீபமாக தமிழ் மக்கள் இயக்கத்தைப் பற்றி தாம் தமது ஆதரவாளர்களுக்கு விளக்கிக்கொண்டிருக்கையில், கற்கள் வீசப்பட்டதாகவும், பின்னர் வீடு திரும்புகையில் தமது மோட்டார்வண்டி மீது கற்கள் வீசப்பட்டதாகவும், கார் சேதமடைந்ததாகவும், 'அமைதியான முறையில் தேர்தலை நடத்தினால்தான்,

[8ம் பக்கம் பார்க்க]

### மூதூர் திருட்டுமுயற்சி வழக்கு

## "பொலிசாருக்கு தமிழ் தெரியாது; மக்களுக்கு சிங்களம் தெரியாது"

### நீதிபதி ஞானச்சந்திரன் கருத்து

மூதூர், புதன்

"விசாரணைக்கு சென்ற பொலிசாருக்கு தமிழ் தெரியாது; விசாரணைக்குட்படுத்தப் பட்டவர்களுக்கு சிங்களம் தெரியாது. இதன் காரணமாகவே, ஒருவர் கூறியது மற்றவருக்கு விளங்காமல் தாக்குதல் சம்பவம் பெரிதுபட்டது என்று கருதுகிறேன்"

மூதூர் நீதிமன்றத்தில் நடந்த திருட்டுமுயற்சி வழக்கொன்றில் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்த மூதூர் நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிங்களம் தெரியாத பொது மக்களுக்கும், தமிழ்தெரியாத பொலிசாருக்குமிடையில், மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றி சமாதானம் ஏற்படுத்த முயற்சித்த உள்ளூராட்சி மன்ற தலைவர் ஒருவரும் இவ் வழக்கில், எதிரியாக்கப் பட்டுள்ளார் என்றும் நீதிபதி

(8-ம் பக்கம் பார்க்க)

## "உடுப்பிட்டி வெற்றிதான் தமிழர்களின் வெற்றி!"

### மு. சிவசிதம்பரம்

உடுப்பிட்டி, புதன்

"இலங்கையிலுள்ள தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில் எதிர்வரும் பொதுத்தேர்தல் முக்கியபங்கு வகிக்கின்றது. உலகிலுள்ள பல்வேறு சக்திகள், அரசியல் கட்சிகள் இத்தேர்தலை மிகவும் உன்னிப்பாகக் கவனிப்பதற்கு இதுவே காரணமாகும்"

இவ்வாறு திரு. எம். சிவசிதம்பரம் உடுப்பிட்டித் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளார் திரு. த. இராஜலிங்கத்தை ஆதரித்து நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார். இக்கருத்தரங்கு கரவெட்டி மேற்கில் திரு. எஸ். பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. திரு. எம். சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"அண்மையில் ருஷிய நாட்டின் செய்திஸ்தாபனமான 'டாஸ்' திரு. அ. அமிர்தலிங்கத்திடம் இலங்கைத் தமிழர்களின் தமிழ்ஈழக் கோரிக்கை சம்பந்தமான விடயங்களை அறிந்து சென்றுள்ளது. இப்படியாக உலகநாடுகள் அதிக கவனம் செலுத்தி வரும் இத்தேர்தலில் வடக்கு- கிழக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## மர்மம் நீடிக்கிறது

யாழ்ப்பாணம், வியா.

யாழ். பெரியாஸ்பத்திரியில் இருந்து கடந்த திங்கட்கிழமை காலை காணாமல்போய்விட்ட குழந்தைபற்றிய மர்மம் இன்னமும் துலங்கவில்லை.

[8ம் பக்கம் பார்க்க]

### கட்டடத் கூட்டுத்தாபன ஒழுங்கீனம்:

## சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை

### அமைச்சர் 'சூரியர்' உத்தரவு

கொழும்பு, புதன்

கட்டடப் பொருள் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படும் ஒழுங்கீனங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் உத்தரவிட்டுள்ளார்.

கட்டடப் பொருள் கூட்டுத்தாபன ஒழுங்கீனங்கள்குறித்து ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு இன்று தனது அறிக்கையை அமைச்சரிடம் சமர்ப்பித்தது.

இத்தணைக்களத்தில் ஏற்

(8-ம் பக்கம் பார்க்க)

## கும்பாபிஷேகம்

வேலணை, புதன்

வேலணை கிழக்கு செட்டி புலம் பதியில் ''காளவாய் துறை'' ஸ்ரீஐயனார் கோவிலின் மஹா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை நயினை ஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

## வலங்கைமான் வாசிப்பார்

வேலணை, புதன்.

இன்று வியாழக்கிழமை நயினாதீவு ஸ்ரீ நகாஜணி அம்மன் 8-ம் திருவிழாவாகும். இந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள தவில்மேதை வலங்கைமான் ஏ. சண்முகசுந்தரம்பிள்ளையின் தவில்க்கச்சேரி நடைபெறும்.


கைக்குரிய திறமைகள்

**மதிப்பீட்டுத் தேர்ச்சி அறிக்கை**

50 பெயர்கள் எழுதக் கூடிய 150 பக்கம்.

ரூ 11-50

**தொழில முன்னிலைப் பாடநெறிப் புள்ளி அட்டவணை**

45 பெயர் எழுதக் கூடிய 10 மூலப்பிரதி 10 இணைப்பிரதிகொண்டது

சொற்ப பிரதிகளே உள.

சுன்னாகம்

**தனலக்குமி புத்தகசாலை**


## இன்று ரதோற்சவம்

(சித்தன்கேணி)

சித்தன் கேணி சிவசிதம்பரேஸ்வரா ஆலய ரதோற்சவம் இன்று காலை நடைபெறுகிறது.

நாளையதினம் நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் வருடாந்தஉற்சவம் நிறைவு பெறுகிறது. (இ)


## விற்பனைக்கு

விசாலமான வீடு. நாலு படுக்கை அறைகள், ஏழு நிலப் பரப்பு காணியல், இருரோட்டு முகப்புடன் சுண்டிக்குளி இறையில், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில், மின்சாரம், குழாய்த் தண்ணீர் சேவை சகல வசதிகளுடன். விபரங்களுக்கு: தொடர்புகொள்ளவும்: செ. விசாகரெத்தினம், 133, பருத்தித்துறை வீதி, நல்லூர, யாழ்ப்பாணம். 6516

## வரி விளம்பரம்

### தேவை

சித்திரம், தைப்பணி வேலைகளில் திறமையுள்ள பெண்பிள்ளைகள் தேவை. நல்லூருக்கு அருகாமையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. செல்வா புறடக்ஸ், ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு சந்தி, நல்லூர். 6507

ஸ்பிறே பெயின்டர் (Spray-painter) தேவை. உடன் நேரில் சந்திக்கவும். கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 6512


## இன்று கும்பாபிஷேகம்

காரைநகர், வியாழன்

காரைநகர் பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன்கோவில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

காலை 10-30 முதல் 11-30 மணி வரை மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (இ)


## தேவை

தச்சு வேலைகளுக்கு நாளாந்தச் சம்பள அடிப்படையில், பல வருட அனுபவம் உள்ள தொழிலாளர்கள் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் பின்வரும் தினங்களில் நேரில் வரவும்:

27-6-77, 28-6-77, 29-6-77.

பொதுமுகாமையாளர்,

**ஈ-நோர் அபிவிருத்தி நிறுவனம்**

காரைநகர்.

6506


## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்

## கேள்வி விளம்பரம்

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கத்தில், பின்வரும் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

4000-க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள்.
கழிவு வெற்றுப் பரல்கள்.
கழிவு சீனி.
சுவிப்பிங் மா.

கேள்விப் பத்திரங்கள் 1-7-1977 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விப் பத்திரங்கள் பெறவிரும்புவோர் காரியாலய வேலை நேரங்களில், வெற்றுச் சாக்குக்கு ரூபா 250/-ம், ஏனைய பொருட்களுக்கு ரூபா 50/- மீளளிப்பு வைப்புப் பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் வைக்கப்படும் கடித உறைகள் அரக்கு முத்திரை இடப்பட்டே ஒப்படைக்கப்பட வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

21-6-197 [illegible]5 9

## அதிபர்கள் ஆதரவு

கிளிநொச்சி, புதன்.

வடபகுதி குடியேற்ற அதிகாரிகள், கிளிநொச்சியில் குடியேற்ற அதிகாரிகள் சங்கத் தலைவர் பி. எச். டி. தயரட்ன தலைமையில் கூடி எதிர்வரும் பொதுத் தேர்தலில் கிளிநொச்சியில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிடும் திரு. என். கனகசூரியரை ஆதரிப்பதென தீர்மானித்தனர்.

ஐ.தே.கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய ஆசிரியர் சங்கத்தலைவரும், கிளிநொச்சியில் உள்ள தமது ஆதரவாளர்களை ஐ.தே.கட்சி வேட்பாளருக்கு ஆதரவு திரட்டும்படி கேட்டுள்ளார். (இ)


## சோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பாடசாலை விட்டு விலகியோருக்கான

## பயிற்சி வகுப்புக்கள்

பின் வரும் பயிற்சி வகுப்புக்கள் ஜூலை 1-ந் திகதி தொடக்கம் பாடசாலைக்குப் புறம்பான நேரங்களில் நடாத்தப்படும். விரும்பியோர் உடனே விண்ணப்பிக்கவும். முடிவுத் திகதி 29-6-77 பயிற்சி முடிந்ததும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

1. ஒட்டுதலும் பொருத்தலும் (வெல்டிங் & பிற்றிங்)
2. பயிர்ச்செய்கை (குறிப்பாக கொத்தமல்லி, சீரகம் போன்ற சரக்கு வகைகளும், திராட்சை செய்கையும் விஞ்ஞான ரீதியாகக் கற்பிக்கப்படும்)
3. தையலும் உடை தயாரிப்பும்
4. பற்றிக் அச்சடித்தலும், கட்டிச் சாயமிடலும் (ரை & டை)

கட்டணம் மாதம் ரூபா 5-00 மட்டும்.

அதிபர்.

6518



## இ. பாலசுப்பிரமணியம்

சட்டத்தரணி,
52, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

1973-ம்ஆண்டின் 44-ம்இலக்க நீதி நிருவாகச் சட்டம் 283-ம் பிரிவின்கீழ்

## இடைக்காலக் கட்டளை

## இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

யாழ்ப்பாணம், மணிக்கூட்டு வீதி, 45-ம் இலக்கத்தில் இருந்து காலஞ்சென்ற சோமசுந்தரம் மகாதேவா என்பவரின் ஆதனங்களும் மற்றும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்டவை.

காலஞ்சென்றவர்

வயம்: யாழ்ப்பாணம்

இல. 346

யாழ்ப்பாணம், மணிக்கூட்டுவீதி, 45-ம் இலக்கத்தில் வசிக்கும் சோமசுந்தரம் மகாதேவாகைம்பெண் கிருஷ்ணவேணி.

விண்ணப்பதாரர்

யாழ்ப்பாணம், மணிக்கூட்டு வீதி, 45-ம் இலக்கத்தில் வசிக்கும்.

1. மகாதேவா தேவ் ஆனந்த்
2. மகாதேவா கிருஷாந்தி 1-ம் 2-ம் பிரதிவாதிகள் தமது பாதுகாவலர்
3. தெகிவளை, இரட்டைகார பிளேஸ், 19-ம் இலக்கத்தில் வசிக்கும் செல்லையா சண்முகநாதன் மூலம் தோன்றுகிறார்கள்.

பிரதிவாதிகள்

1977-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ந் திகதியைக் கொண்ட 281-ம் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் உறுதிக்கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிருபிக்கப்பட்டுள்ளதென திருப்தியடைந்ததன் பேரில் யாழ்ப்பாண நீதிபரிபாலன தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பேரில்

(அ) 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பாக எவராவது ஆட்சேபம் தெரிவித்தாலன்றி மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச்சென்ற மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கும் மற்றும் பெறுமதிகளுக்கும் திருவாகத் தத்துவப்பத்திரம் பெறுவதற்கு மேற்சொல்லப்பட்ட விண்ணப்பகாரரே காலஞ்சென்றவரின் கைம்பெண் என்ற வகையில் உரித்துடையவர் என்றும் அவ்வண்ணமே அவருக்கு திருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படுகிறதென்றும்,

(ஆ) மேலும் இம்மரணச் சொத்து நடவடிக்கை சார்பாக மேலே சொல்லப்பட்ட 3-ம் பிரதிவாதியை பராயமற்றவர்களாகிய 1-ம், 2-ம் பிரதிவாதிகளுக்கு பாதுகாவலராகவும் நியமிக்கப்படுகிறதென்றும் இத்தால் கட்டளையிடுகிறேன்.

ஒப்பம்

கா. கணபதிப்பிள்ளை

தத்துவப்பத்திர அதிகாரி

1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ந் திகதி.

6517



## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

வழு: இல. 14395

1. செல்லையா ராமச்சந்திரனும் பெண்
2. பரமேஸ்வரியும், 17, ஓடைவேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

வாதி

எதிராக

1. செல்லையா செல்வரத்தினமும் பெண்
2. குலதேவியும், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

பிரதிவாதி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 14395-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1977-ம் ஆண்டு ஆனி மாதம் 24-ந் திகதி (8-7-77) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 24680. 30-5-74 தொடக்கம் 7-7-75-ம் ஆண்டு வரைக்கும் 20000/-க்கு 11% வட்டியும் அதன்பின் தீர்வை முழுதொகைக்கும் இறுக்கும்வரை சட்ட வட்டியான 5% வட்டியும் வழக்குச் செலவு ரூ. 869-51 சதம்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக், யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் மேற்கு இறை நிலப்பரப்பு 5ம், குளி 12 3/8ம் ஒரு கூடத்தையும் நான்கு அறைகளையும் ஒரு அடுக்களையையும் கொண்ட ஒரு நிரந்தரமான கல்வீடும் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு வைத்திலிங்கம் பாலசிங்கத்துக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு வாய்க்கால் ஒழுங்கை தெற்கு இரத்தினசபாபதி கைம்பெண் ஜெயலக்சுமிக்குரிய ஆதனம்.

மு. விஜயராசன்,
நீதிமன்ற விற்பனவு விளம்பரதாரர்.
6514

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.



பூச்சிப் பொடுக்களை அழித்தொழித்து சிறந்த விளைச்சல் பெற நாவ்யுங்கள்




சர்வதேச நெற்பயிர் ஆராய்ச்சி நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட நுணுக்க ஆய்வுகளின் நிமித்தம், இன்று சந்தையில் பெறக்கூடிய மிகச்சிறந்த பூச்சி பொடுக்கள் கொல்லி **பக்ஸ்**.

இது மொனிட்டர் 600 தயாரித்தோரான ஷெவ்ரோன் கம்பனி லிமிட்டெட்டின் மற்றும் ஓர் தயாரிப்பு.

உங்களுக்கு அண்மையிலுள்ள வர்த்தகரிடம் அல்லது எம்மிடம் கிடைக்கும்.

**ஹரிசன்ஸ் அன்ட் குரொஸ்பீல்ட்**

(கொழும்பு)

டார்லி ரோட், கொழும்பு —10.

# பிரி.சிறையில் 7 ஆண்டுகள்; அவசரநிலையில் 19 மாதம்:

## சிறைவாழ்க்கையே தமது விடுதலைநாட்கள் என்கிறார் மொரார்ஜி

லண்டன், ஜூன் 22

"நெருக்கடி நிலையின்போது 19 மாதகால சிறைவாழ்வினால், எனது மனநிலை நன்கு மாறியிருக்கின்றது. யார் மீது எனக்கு வெறுப்பில்லை. என்னுள் இருந்த மனவிரிசல்களை நான தனிமையில் இருந்து சிந்தித்ததால் அகற்றிவிட்டேன். சிறையில் இருந்ததால் என் உணர்வுகள் பக்குவமடைந்தன. நான் சிறையில் கற்றுக்கொண்டது அதிகம்" இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறினார்.

லண்டன் டெலிவிஷன் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தமது பேட்டியில் மேலும் கூறியுள்ளதாவது:

"பிரிட்டிஷ்சிறையிலிருந்த 7 ஆண்டுகளும் நெருக்கடி நிலையின்போது அனுபவித்த 19 மாத சிறைவாசமுமே என் வாழ்வின் விடுதலைநாட்கள். யார் மீதும் எனக்கு வெறுப்பில்லை. நான் பூரணத்துவம் அடைந்துவிடவில்லை. பூரணத்துவம் அடைந்தால் இங்கில்லாமல் இறைவனுடனல்லவா கலந்திருப்பேன்.

"நான் பல பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்து, புலனடக்கம் உள்ளவனாக இருப்பதால் எனது வழிமுறைகள் முன்னேற்றமுள்ளவையாக உள்ளன. அதைப்போல மனிதன் மீது திணிக்கப்படும் எந்தச் செயலும் வெற்றியளிக்காது. வழிமுறைகளே வாழ்வளிக்கும்

"எனது அரசு பழிவாங்கும் மனோபாவத்துடன் நடந்து கொள்ளாது. குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு எந்தவிதத்திலும் பாதுகாப்பு அளிக்கப்படமாட்டாது". (கெ-இ)

---

## "முதல் கூட்டத்தின் பின் தமிழ்ஈழ பிரகடனம்"

### மீசாலையில் கோடீஸ்வரன்

கொடிகாமம், புதன்

சிங்களவர்கள் தங்களுக்கென ஓர் அரசியல் நிர்ணயசபை உருவாக்கியது போல் தமிழர்களும் தமக்கென ஓர் அரசியல் நிர்ணயசபையை உவாக்க வேண்டும். தமிழர்கள்சுதந்திரமாக வாழவேண்டும் என்பதுவே சுயாட்சிக்கழக கட்சியின் நோக்கமாகும். பொதுத் தேர்தல் முடிந்து பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்திற்குச் சென்று தாயகம் திரும்பியதும் எங்கள் பிரதிநிதிகள் சுயாட்சி பிரகடனம்செய்து அதற்கான செயலில் இறங்கியே தீருவார்கள்.

இவ்வாறு மீசாலை சந்தை மைதானத்தில் தலைவர் திரு. சி. கா. குலசேகரம் தலைமையில் சுயாட்சிக்கழக வேட்பாளர் திரு. சி. பொ. மயில்வாகனனை ஆதரிக்கும் முகமாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு. செ. கோடீஸ்வரன் கூறினார். சாவகச்சேரி தொகுதி சுயாட்சிக்கழக வேட்பாளர் திரு. சி. பொ. மயில்வாகனன் பேசுகையில் கூறியதாவது:-

"1954ம் ஆண்டு நான் தமிழரசுக் கட்சியையும் பின் தமிழ்க் காங்கிரஸ் கட்சியையும் ஆதரித்தேன் அவற்றிற்காக சுயநலமின்றி உழைத்தேன். தமிழரசுக்கட்சி தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தொண்டமான் தலைமையிலான தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற கட்சிகள் தேர்தலுக்காக மட்டும் கூட்டணியாக மாறின. இவற்றோடு திரு. வி. பொன்னம்பலமும் ரஷ்ய கம்யூனிஸ்டும் சேர்ந்தன.

"தமிழனுக்குஇன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை. எங்கள் தலைவர் நவம் 1968-ம் ஆண்டு தீர்க்கதரிசனமாகக் கூறிய 'சுயாட்சி' யால் தான் தமிழ் மக்களுக்குவிமோசனம் கிடைக்கும்.

திருவாளர்கள் முருகேசு மோகனதாஸ், வீரத்தமிழர் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த சி. சிவசம்பு, சி. பா. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர். (இ)

---

## ஜனதா மாநில-மத்திய மந்திரிகள் எளிய சிக்கன வாழ்க்கை

### அமைப்பர் சந்திரசேகர் கூறுகிறார்

புதுடில்லி, ஜூன் 22

ஜனதாகட்சியின் மாநில மத்திய அமைச்சர்கள் எளிமையான சிக்கனமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வார்கள் என்று ஜனதா கட்சித்தலைவர் திரு. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அரசு ஆடம்பரச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் பணிகளில் புதிய மாநில அரசு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் திரு. சந்திரசேகர் தெரிவித்தார். (இ)

---

## பேசும் பொம்மை

சென்னை, ஜூன், 22

டிரான்சிஸ்டர் வானொலியை இணைத்து பொம்மைகளை உற்பத்திசெய்யசென்னையில்உள்ள நிறுவனம் முன் வந்துள்ளது. ஏழைக் குழந்தைகளுக்காகவே இப்பேசும் பொம்மைகள் உற்பத்தி செய்யப்படுகின்றனவாம்.

சுமார் 30 ரூபாவிலிருந்து 40 ரூபாவரை குறைந்த விலையிலேயே இப்பொம்மைகள் விற்கப்படும் என்று அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

---

முதல் டெஸ்ட்:

## எவருக்கும் வெற்றியில்லை

லண்டன், ஜூன். 22

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்துவரும் ஆஸ்திரேலிய கோஷ்டிக்கும்இங்கிலாந்து கோஷ்டிக்கும் இடையே லோட்ஸ் மைதானத்தில்நடைபெற்ற முதலாவது கிரிக்கட் டெஸ்ட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பாடிய இங்கிலாந்து 216 ஓட்டங்களைப் பெற்றது. வூல்மர் 79 ஓட்டங்களையும், ரண்டல் 53 ஓட்டங்களையும் பெற்றனர். ஆஸி வேகப்பந்துவீச்சுவீரர் தொம்சன் 41 ஓட்டங்களுக்கு 4விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

அதைத்தொடர்ந்து ஆடிய ஆஸ்திரேலியா 296 ஓட்டங்களைப் பெற்றது. கிரெக்சார் ஜன்ட், கிரெக் சப்பல், வால்டர்ஸ் ஆகியோர் முறையே 81, 66, 53 ஓட்டங்களைப்பெற்றனர் வில்லிஸ் 78 ஓட்டங்களுக்கு 7 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

இங்கிலாந்து 2வது இன்னிங்ஸில் 305 ஓட்டங்களைப் பெற்றது. வூல்மர் 120 ஓட்டங்களையும், ரொனி கிரெக் 91ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆஸ்திரேலியா ஆட்டஇறுதி நாளில் 6 விக்கடநஷ்டத்திற்கு 114 ஓட்டங்களைப் பெற்றது.

2-வது டெஸ்ட் அடுத்த மாதம் 7ம் திகதிஆரம்பமாகின்றது. (இ)

---

## அக். 7-ல் பாக். தேர்தல்

கராச்சி, ஜூன் 22

பாகிஸ்தானில் இவ்வருடம் அக்டோபர் 7-ம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறும்.

பாக். பிரதமர் ஜுைப் சுல்பிகார் அலிபூட்டோ நேற்று இத் தகவலை வெளியிட்டார்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் பாகிஸ்தானில் நடைபெற்ற தேர்தலை அடுத்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு எதிர்க்கட்சித் தலைவர்களும் பிரதமரும் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றி அளித்ததைத் தொடர்ந்தே ஜுைப் பூட்டோ இப்போது தேர்தலுக்கான திகதியை அறிவித்துள்ளார். (இ)

---

ஊழல், அடக்குமுறை

## விசாரணை செய்ய 2 கமிஷன்கள்

புதுடில்லி, ஜூன் 22

திருமதி. இந்திராகாந்தியின் ஆட்சிக்காலத்தில் இடம் பெற்ற அடக்குமுறை, ஊழல் ஆகியவற்றை விசாரணை செய்ய இரண்டு விசாரணைக் கமிஷன்களை நியமிக்க புதிய மேற்கு வங்காள இடதுசாரி கூட்டணி அரசு தீர்மானித்துள்ளது.

நடந்துமுடிந்த சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற இடதுசாரிக் கூட்டணியின் மேற்குவங்காள முதலமைச்சராக திரு. ஜோதிபாசு பதவி ஏற்றுள்ளது தெரிந்ததே. (இ)

---

## அந்தகருக்கு இலவச பஸ் பயணம்

சென்னை, ஜூன். 22

தமிழ்நாட்டில் கண்பார்வையற்றவர்களை இலவசமாக பஸ்களில் ஏற்றிச்செல்ல பல்லவன் போக்குவரத்துக்கழகம் தீர்மானித்துள்ளது.

சென்னை நகரில் மட்டும் இவர்களுக்கு இலவச வசதி அளிக்கப்படும். (இ)

---

## விக்ரோறியா மாணவரின் செயல்திட்டம்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி தேசிய உயர்கல்வி வகுப்பு மாணவர்கள் தமது செயற்திட்டகல்வியின் ஒரு பகுதியாகிய நீரின் பாதுகாப்பை பொது மக்களுக்கு விளங்க வைப்பதற்காக கல்லூரியின் சுற்றுக் கிராமங்களில் முகாமிடுகின்றனர்.

இதற்கான முதலாவது முகாம் வழக்கம்பரை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் நடத்தப்பட்டு வருகின்றது. மேற்படி கோவிலில் தற்போது நடைபெற்று வரும் வருடாந்த உற்சவத்தின் போது அங்கு கூடும் மக்களுக்கு இம்முகாம்களில் உள்ளமாணவர்கள் நீரைப் பேணிப் பாதுகாக்கவேண்டிய தன் அவசியத்தையும், நீரின் சேமிப்பினால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் எடுத்துக் கூறுகின்றனர் அத்துடன் இதுசம்பந்தமான படக்காட்சிகளும், கருத்தரங்குகளும், விளக்கவுரைகளும் தொடர்ந்து ஒரு வாரம் நடைபெறும்.

---

ராஜ்ய சபையின் 21 இடங்களுக்கு

# விரைவில் தேர்தல்

புதுடில்லி, ஜூன். 22

ஆகஸ்ட் மாதம் நடைபெற உள்ள இந்திய ஜனாதிபதி தேர்தலையொட்டி தற்போது காலியாக உள்ள ராஜ்ய சபைஸ்தானங்களுக்கான தேர்தல் விரைவில் நடைபெறும் என்று தெரிகிறது.

21 ராஜ்யசபை இடங்கள் தற்போது காலியாக உள்ளன. 19 மாத ஜனாதிபதி ஆட்சியின் கீழ் இருந்த தமிழ்நாட்டின் 6 ராஜ்ய உறுப்பினர்கள் பதவிகளும் பாண்டிச்சேரியில் ஒரு உறுப்பினர்பதவியும் காலியாக இருக்கின்றன. (இ)

---

## நீரில் உப்பு நீக்கும் முதல்உலகமாநாடு

வாஷிங்டன், ஜூன் 22

உப்பு நீக்கும் தொழில் முதல் உலகமாநாடு அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் ஸாண்டியாகோ நகரில் அடுத்த மாதம் நடைபெறும். நீரில் இருந்து உப்பு நீக்குதல், கழிவு நீரைத் தூய்மைப்படுத்துதல் முதலியன பற்றிய தொழில் நுட்பம் இம்மாநாட்டில் சிறப்பிடம்பெறும்.

அமெரிக்க நீர்வழங்கு மேம்பாட்டுச் சங்கம் ஏற்பாடுசெய்துள்ள இம் மாநாடு ஸாண்டியாகோ நகரில் ஹோட்டல் டெல் கொரனடோ மன்றத்தில் ஜூலை 17 முதல் 21வரை நடைபெறும். தெற்கு ஆசியா, மத்தியகிழக்கு உட்பட 32 நாடுகள் இம் மாநாட்டில் கலந்துகொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீர் வழங்கு பொறிகள் தயாரிக்கும் அமெரிக்க நிறுவனங்கள், விஞ்ஞான ஆலோசனைப் பொறியியல் நிறுவனங்கள் ஆகியவை தமது தயாரிப்புக்களைஇங்கு காட்சிக்குவைக்கும்.

---

# எண்ணெ விலை உயராது!

## முன்னையதீர்மானம் கைவிடப்பட்டதாம்

ரியாட், ஜூன். 22

எண்ணை விலையை இப்போதைக்கு அதிகரிப்பதில்லைஎன்று எண்ணை உற்பத்தி ஏற்றுமதி நாடுகள் தீர்மானித்துள்ளதாக ரியாட் செய்திகள் தெரிவிக்கின்றன.

எண்ணெயின் விலையை இவ்வருடம் ஜனவரியில் 10சதவீதமும், ஜூலையில் 5 சதவீதமும் அதிகரிப்பதென 'ஒப்பெக்' நாடுகள் கடந்தவாரம் தீர்மானித்திருந்தன. எனினும் 'ஒப்பெக்' நிறுவனத்தில் அங்கம் வகிக்கும், சவூதி அரேபியாவும் அரபு எமிரேட்ஸும்ஒருமுறை மட்டுமே எண்ணெயின்விலையை அதிகரிப்பதெனத் தீர்மானித்திருந்தன.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தபடி அடுத்தமாதம் முதல் எண்ணையின் விலையை அதிகரிப்பதில்லை என 'ஒப்பெக்' நிறுவனம் இப்போது தீர்மானித்துள்ளது என்று சவூதி அரேபிய எண்ணை அமைச்சர் ஜுைப் ஜமானிக்கு வெனிசூலா எண்ணை அமைச்சர் அறிவித்துள்ளதாக ரியாட் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

---

## 7 பொலிஸ் அதிகாரிகள் மீது வழக்கு

திருவனந்தபுரம், ஜூன் 22

கேரள என்ஜினியரிங் கல்லூரி மாணவரான ராஜன் தவறானமுறையில் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைத்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று 7 பொலிஸ் அதிகாரிகள் மீது குற்றம்சாட்டி வழக்குத்தொடரப்பட்டுள்ளது. இதுதொடர்பாக 3 பொலிஸ் உயர் அதிகாரிகளும் 4 பொலிஸ் உத்தியோகத்தர்களும் கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (இ)

---

## குரங்கு இருதயப்பெண் மரணம்

கேப்டவுன், ஜூன் 22

பிரபல இருதய மாற்று நிபுணர் டாக்டர் கிறிஸ்டியன் பெர்னட்டினால் குரங்கு இருதயம் பொருத்தப்பட்ட இத்தாலிய இளம் பெண் மரணமானார் என்று அறிவிக்கப்பட்டது.

இருதய நோயினால் அவதியுற்ற இந்த 26 வயது இளம் பெண்ணுக்கு 10 மணித்தியாலங்கள்வரை நடைபெற்ற சத்திரசிகிச்சையின் பின் குரங்கு இருதயம் பொருத்தப்பட்டது தெரிந்ததே. (இ)

**மணிவாக்கு**

குழந்தையாக இருந்தபொழுது என்னைத் துயருறச் செய்த விஷயங்கள் இப்பொழுது என்னைத் துயருறச் செய்வதில்லை. ஆள்மாறிவிட்டேன், பொருளும் மாறித்தான் ஆகவேண்டும்.

— சுவாமி விவேகானந்தர்.

ஈழநாடு
THE EELANAADU

# தேர்தலும் வன்செயல்களும்

முப்பதுகோடி வாக்காளருக்குமேல் உள்ள இந்தியாவில் நடைபெற்ற லோக்சபைத் தேர்தலில் ஒருசில மாநிலங்களைத் தவிர வன்செயல்கள் அநேகமாக இல்லை சமீபத்தில் நடைபெற்ற பலமாநில சட்டசபைத்தேர்தல்களும் பெரும்பாலும் அமைதியாகவே நடைபெற்றுள்ளன. இதன் மூலம் இந்தியாவின் ஜனநாயகப் பண்பு, உலக நாடுகளின் மதிப்பைப் பெரிதும் பெற முடிந்துள்ளது.

போட்டி இடும் பல கட்சித் தலைவர்களும், பொதுத் தேர்தலுக்கு முன்பாகக்கூடி எந்தக்கட்சியினரும் வன்செயல்களை ஆதரிப்பதில்லை என்று தங்களுக்குள் தீர்மானித்தன. பலாத்கார வழிகளை முற்றிலும் கைவிடாத கட்சிகளும்கூட, பொதுத்தேர்தலை அமைதியாக நடத்தவேண்டும் என்று தீர்மானித்து, ஒத்துழைக்கவும் செய்துள்ளன. வன்செயல்களுக்கு இடமளித்தால், ஜனநாயகமே சீர்குலைந்து, அராஜகம் தலைதூக்கிவிடுமென்பதை விளக்கத் தேவையில்லை.

சில நாடுகளில் பொதுத் தேர்தல் வரப்போகிறதென்றால் பொதுமக்களுக்கும் சிறப்பாக சிறுபான்மை வகுப்பினருக்கும் பீதியும் கவலையும் ஏற்படுவது சகஜம். இலங்கையிலுள்ள தமிழர்களில் பலர் தேர்தல் காலத்தில் வன்செயல்களுக்குப் பலியாகிவந்துள்ளதும் அதனால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அவதிகளும் கொஞ்சமல்ல.

இம்முறை பொதுத்தேர்தலில், பலாத்காரமும் வன்செயல்களும் அதிகமிருக்குமென்று பொதுவாக அஞ்சப்படுகிறது. இதைத் தவிர்க்க வேண்டியது பொதுவாக அரசாங்கத்தின் கடமை என்றாலும் தேர்தலில் ஈடுபட்டுள்ள பலகட்சியினரும் வேட்பாளர்களும் சேர்ந்து ஒத்துழைத்து, தேர்தலை அமைதியாக நடத்த வேண்டியது பல விதங்களிலும் அவசியமாகும்.

ஒரு கட்சியினரோ தனிப்பட்டவரோ, ஓரிடத்தில் வன்செயல்களை மூட்டிவிட்டால் அது நாடெங்கும் காட்டுத் தீபோல் பரவி, பெரும் நாசங்கள் ஏற்பட்டு பொதுமக்களைப் பல துன்பங்களுக்கும் கஷ்ட நஷ்டங்களுக்கும் உள்ளாக்கி ஜனநாயகமே குட்டிச் சுவராகிவிடுவதைப் பார்க்கின்றோம்.

பொதுத் தேர்தலுக்கு இன்னும் சில வாரங்களே உள்ளன. பல முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களையும், வேட்பாளர்களையும் பிரதமர் கூட்டி வன்செயல்களைத் தவிர்க்கவேண்டிய அவசியத்தையும் இதற்கு எல்லாருடைய ஒத்துழைப்பும் பெறவும் முன்வர வேண்டியது அவசியமாகும்.

மற்ற இடங்களில் எப்படியாயினும், சிறப்பாக உரிமைக்காகப் போராடும் தமிழ் மக்களிடையே, வன்முறைகள் எக்காரணம் பற்றியும் தலைதூக்க தமிழ்த் தலைவர்கள் இடமளிக்கக் கூடாது. உணர்ச்சி வசப்பட்டு கூட்டங்களில் பேசுவதும் போட்டி அபேட்சகர்களை வன்மொழிகளால் தாக்கிப்பேசுவதும், பொதுமக்களில் சிலரை வன்செயல்களுக்குத் தூண்டிவிடுவதாக இருக்கும். தேர்தலில் எப்படியாவது வெற்றி பெறவேண்டுமென்று பல வேட்பாளர்களுக்கும் அவர்களை ஆதரிப்பவர்களுக்கும் ஆவல் இருப்பது இயற்கை. ஆனால் தேர்தல் போட்டிகள், மக்களிடையே வன்செயல்களைக் கிளப்பிவிடுமாயின், சிறப்பாகத் தமிழ்ச் சமூகத்தின் நிலை மற்றவர்களின் சிரிப்புக்கும் கேலிக்கும் இடமாகும். அவ்விதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது சிறப்பாக பொறுப்புவாய்ந்த எல்லாத் தமிழ்த் தலைவர்கள், வேட்பாளர்கள் இவர்களது மேலான கடமையாகும். தேர்தலில் வெற்றி பெற்றுவிடுவதால் மட்டும் தமிழினத்தின் இலட்சியம் கைகூடிவிடாது. தமிழ் மக்களிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் பலப்படவேண்டும். ஒன்றுபட்டாலே உண்டுவாழ்வு, ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு. வன்செயல்களும் சொற்களும் இங்கு தலைதூக்கி வருவது கவலையளிப்பதாகும். தமிழரின் நன்மையை நாடுபவர்கள் இதற்குச் சிறிதும் இடம் கொடுக்கக்கூடாது தமிழ்ப் பகுதியிலுள்ள வேட்பாளர்களும் தலைவர்களும் கூடி இம் முக்கிய விஷயத்தைப் பற்றி முன்கூட்டி கலந்து பேசுவது, பலவிதங்களிலும் நன்மைபயக்குவதாக இருக்கும்.

## ஸ்ரீவல்லிபுரசுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம்

பருத்தித்துறை, புதன்

வடமராட்சியில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர சுவாமிதேவஸ்தானபுனராவர்த்தனமகாகும்பாபிஷேகம் ஜூலை மாதம் 3ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் 10 மணிவரை நடைபெறவிருக்கிறது. வல்லிபுர சுவாமிக்கும் மற்றும் விநாயகர், நாகதம்பிரான், நவக்கிரகம், பக்தஆஞ்சநேயர் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்குமே இக்கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இம்மாதம் 27ம் திகதி தொடக்கம் 7 நாட்கள்வரை கிரியாகால நிகழ்ச்சிகள் நடைபெற்று அடுத்த மாதம் 3ம் திகதிநடைபெறும் மகா கும்பாபிஷேகத்துடன் முடிவடைகிறது. வல்லை பெருமாள் தேவஸ்தான பிரதமகுரு பிரதிஷ்டாசிரோமணிசாமி.விஸ்வநாதக்குருக்கள், ஸ்ரீவல்லிபுர சுவாமிதேவஸ்தான பிரதம குருபிரம்மஸ்ரீ ச.க. இராமச்சந்திரகுருக்கள் தலைமையில் இக்கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

யாழ்வளாக பேராசிரியர் பிரம்மஸ்ரீ க. கைலாசநாதக்குருக்கள், பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணியசாஸ்த்திரிகள், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் உபந்யாசம்செய்வார்கள் விசேஷ மங்கள நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

# “தேர்தலில் எமக்கேவெற்றி மொழிப்பிரச்னையும் தீரும்”

## — பிரதமர் சிறிமா

மட்டக்களப்பு, புதன்

“எதிர்வரும பொதுத் தேர்தலில், மீண்டும் நாமே வெற்றிபெறுவோம்; ஆட்சி அமைப்போம். பொதுத் தேர்தல் வெற்றியை அடுதது ஆட்சிப்பொறுப்பை ஏற்றதும் மொழிப்பிரச்னை தீர சுமுகமான எல்லா நடவடிக்கைகளையும் துரிதமாக எடுப்போம். மொழி உட்பட தமிழ்ப் பேசும் மக்களின் ஏனைய பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு எமது அரசாங்கம் மிகவும் ஆவலாக இருக்கிறது. இதனை, தமிழ் பேசும் மக்கள் அறிவார்கள்” என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இங்கு நடை பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர்களில் ஒருவரான திரு. ராஜன் செல்வநாயகத்தை ஆதரித்து இத்தேர்தல் பிரசாரக்கூட்டம் நடை பெற்றது.

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தொடர் பேசுகையில் கூறியதாவது: “தமிழ்ப்பேசும் மக்களின் நீண்ட காலப் பிரச்னையாக இருந்துவரும் மொழிப்பிரச்னையைத் தீர்த்து வைக்கநாம் முயற்சிகள்எடுத்தோம். இதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன்இரண்டு தடவைகள் பேச்சுவார்தைகள் நடத்தினோம். இந்தப்பேச்சு வார்த்தைகள் தொடர்ந்தும் நடைபெறவிருந்தன. அந்த நேரத்தில் தமிழ்மக்களின் அபிமானத்தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் சுகவீனமுற்று, காலமானார். அதன் பின்னர் தேசிய அரசுப் பேரவையும் கலைக்கப்பட்டு விட்டது பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தி தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியாமற் போனது துரதிருஷ்டமே.

“தமிழ்ப்பேசும் மக்களின் மீது இனத்துவேஷத்தைக் கிளப்ப மாற்றுக் கட்சியினர் பிரசாரம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சகல இனமக்களையும் ஒரே பார்வையின் கிழ் கண்ணியத்துடன் நடத்தி வருவதையாரும் மறுக்க முடியாது”

# பிரதமரின் கூற்றுக்கு ஜே.ஆர்.மறுப்பு!

மட்டக்களப்பு, புதன்

“ஐக்கிய இடதுசாரி முன்னணியுடன் நான் இரகசிய ஒப்பந்தம் செய்திருப்பதாகத் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறுகின்றார். நான் அவர்களுடன் ஒப்பந்தம் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் ஜூலை மாதம் 21ம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலில் திருமதி பண்டாரநாயக்காவையும் அவரது அரசாங்கத்தையும் தோற்கடிக்க, பொதுமக்களுடன் வெளிப்படையான ஒரு ஒப்பந்தத்தைச் செய்திருக்கின்றேன்” என்று மட்டக்களப்பு பாட்டாளிபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பேசுகையில் கூறினார். அவர் மேலும் பேசியதாவது:-

“திருமதி பண்டாரநாயக்காவையும் அவரது அரசாங்கத்தையும் மக்கள் ஏன் தோற்கடிக்கவேண்டும் என்பதற்குக் காரணம் உண்டு. கடந்த ஏழு ஆண்டுகளிலும் மக்களைப் பல விதமாகக் கஷ்டப்படுத்தியதற்காக அரசை, மக்கள் கண்டிப்பாகத் தோற்கடிக்கவேண்டும்.

“கடந்த ஏழு ஆண்டுகளாக உங்களை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, டாக்டர் பதியுதீன் மஹ்மூத், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஆண்டிருக்கின்றனர். 1970-ல் இருந்ததையும்பார்க்க நீங்கள் சிறப்பாக இருக்கின்றீர்களா? அப்படி யாரும் மகிழ்ச்சியாக இருந்தால், எப்படி நீங்கள் கஷ்டமில்லாது இருக்கிறீர்கள் என்பதை எங்களுக்குக் கூறுங்கள். ஸ்ரீ. ல. சு. கட்சி தனது கட்சி ஆதரவாளர்களுக்கு மட்டுமே சலுகைகள் வழங்கியுள்ளது. என்னிடம் இந்த எண்ணம் இல்லை. காரணம் நீங்கள் அனைவரும் எனது சகோதரர்கள், சகோதரிகள். நீங்கள் சிங்களவர்களாக இருந்தாலும் சரி அல்லது தமிழ், முஸ்லிம்களாக இருந்தாலும் சரி. நீங்கள் அனைவரும் ஸ்ரீலங்காவின் பிரஜைகள். ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஒரு சகோதரன் அல்லது சகோதரி.

“ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்ததும், வானொலியையும் லேக்ஹவுஸ் பத்திரிகைகளையும் சுதந்திரமாக உபயோகிக்க எதிர்க்கட்சியினருக்கு உரிமை வழங்கப்படும். வானொலி மற்றும் லேக்ஹவுஸ் இயக்குநர் சபையில் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளும் நியமனம் பெறுவார்கள்.

“மக்களின் பேராதரவுடன் ஜூலை 21ம் திகதி ஐ. தே. கட்சி ஆட்சி இந்நாட்டில் மீண்டும் மலரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.”

# பிரதமரின் கட்டுக்கதை பாலர் வகுப்புக்குத்தான் சரி!

## - டாக்டர் என். எம்.

ஐயந்திபுரம், புதன்

“ஆட்சியிலிருந்து லங்கா சமசமாஜக் கட்சியை வெளியேற்றியது குறித்து பலவிதமான கட்டுக்கதைகளைபிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வெளியிட்டு வருகின்றார் இந்தக் கதைகள் பாலர் வகுப்புகளுக்குத்தான் பொருத்தமாக இருக்கும்” என்று டாக்டர் என். எம். பெரேரா இங்குநடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

“அரசாங்கத் திலிருந்து லங்கா சமசமாஜக்கட்சியை வெளியேற்றியது சம்பந்தமாக பிரதமர் பலகதைகளைக் கூறி வருகின்றார். லங்கா சமசமாஜக்கட்சி வெளியேற்றப்பட்டதற்கு உண்மையான காரணம் பிரதமர் முதலாளிகள் வரிகளால் தாக்கப்படுவதை விரும்பவில்லை.

“நான் அறிமுகப்படுத்திய செல்வவரி, கட்டாயச்சேமிப்புத்திட்டம், மற்றும் வரித் திட்டங்கள் முதலாளிகளைக்கடுமையாகத் தாக்கின. நான்தொடர்ந்து நிதி அமைச்சராக இருந்தால், தாங்கள் அழிந்துவிடுவோமென முதலாளித்துவ வர்க்கத்தினர் அஞ்சினர். வருமான உச்சவரம்புத்திட்டம், தனியார் கம்பெனி டைரக்டர்கள் 'விஸ்கி'

(7-ம் பக்கம் பார்க்க)

(5ம் கலத்தொடர்ச்சி)

ளுக்கு எப்போது நல்ல புத்தி கொடுத்து எங்கள் தமிழ்ப்பண்பையும் இனத்தையும் காக்கப் போகிறாய்?

# ஐயாறன் எழுதுவது

இன்று பாலாவோடை அம்மன் கோயில் கும்பாபிஷேகம் நடப்பதாகத் தற்செயலாக அறிந்தேன். தற்செயல் என்பது என்ன? எல்லாம் (தன் செயல்) அவள் செயல் தானே!

மூன்று வருடங்களுக்கு முன்பாக காரைநகர் களபூமி முருகமூர்த்தி கோயில் கும்பாபிஷேகத்துக்குச் சென்று அங்கு நடந்த வைபவங்களை தரிசித்து இப்பத்திகளில் எழுதி இருந்தேன். அச் சமயம் பக்கத்திலுள்ள பாலாவோடை அம்மன் கோயில் ஒரு வருஷ காலத்துக்கு மேல் பூசையின்றி பூட்டப்பட்டுக் கிடந்ததாக அறிந்தேன்.

கோயில் பூசை, கும்பாபிஷேகம் நடப்பது எல்லாம் ஏன்; நம்மனதிலுள்ள ஆசாபாசங்களையும் உயர்வு- தாழ்வு சாதி அழுக்குகளையும் நீக்கி நம்மனதைச் சுத்தப்படுத்தவும். அன்பு பெருகி பேரின்பம் துய்க்கவுமே என்றும், களபூமி அம்மன் கோயில் கும்பாபிஷேகம் நடந்த நற்பயனாக, அங்கு மக்களிடையே அன்பு பெருகி, உயர்வு-தாழ்வு எண்ணங்கள் நீங்கி, மூடப்பட்ட பாலாவோடை அம்மன் கோயில் சீக்கிரம் திறக்கப்பட எல்லாம் வல்ல முருகன் திருவருள் செய்வாராக என்றும் எழுதியிருந்தேன்.

அப்படி எழுதிய ஒருவாரத்துக்குள்ளாக, ஒரு வருஷத்துக்குமேல் பூட்டப் பட்டிருந்த அந்த அம்மன் கோயில் திறக்கப்பட்டதாகவும், பாலஸ்தாபனம் செய்யப்பட்டதாகவும் அறிந்தேன். இப்போது திறக்கப்பட்ட அதே கோயிலில் கும்பாபிஷேகம் நடப்பதாக அறிந்ததும் மிக மகிழ்ச்சியாக இருந்தது. அம்மனின் கருணை வெள்ளம் பெருகி, நமது மன அழுக்குகள் எல்லாம் நீங்கி, நமது சமூக அரசியல் பொருளாதாரம் முதலிய சங்கடங்களும் தீரவேண்டுமென்று உளமாற பிரார்த்தனை செய்வோம். மன அழுக்குகள் நீங்கினால் அவள் அருள் சுரந்து, நமக்கு வேண்டும் வரங்களை எல்லாம் தருவாள் தானே!

“நம்பினோர் நலமடைவர் இது நான்குமறைத் தீர்ப்பு அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்.”

ஃ ஃ ஃ

தமிழரிடையே ஒற்றுமை வேண்டும், ஒருமைப்பாடு வேண்டும் என்றெல்லாம் கேட்கிறோம். தேர்தல் வந்தபின் ஏற்கெனவே இருந்த ஒற்றுமையும் குலைந்துவருவதைப் பார்க்கிறோம். தேர்தல்கள் வேற்றுமையைத்தான் வளர்க்கின்றன.

தேர்தல் வேண்டியதுதான். ஆனால் இந்தப் போட்டா போட்டிகளையும் அன்பற்ற செயல்களையும் தவிர்த்து நமது பழைய தமிழ்ப்பண்பின்படி குடவோலை முறையைக் கையாண்டு, திருவருளை நம்பி, நமது பிரதிநிதிகளை நேரான முறையில் தெரிவு செய்யமுடியாதா?

தேர்தல் வீண்செலவுகளோ, சங்கடங்களோ, வன்முறைகளோ எதுவும் இல்லாமல் போகுமே! ஆனால் வெள்ளைக்காரன் காட்டிய கோணல்வழி தானே ‘ஜனநாயகம்!’ அதை விட்டு, நமது பழைய தமிழ் தர்மப்படி தேர்தல் நடத்த நம்மிலே யார் சம்மதிப்போம்?

தெய்வவழியைப் பின்பற்றினால் நமது சங்கடங்கள் எல்லாம் தீரும்! நமது ஒற்றுமையும், அன்பும் பலப்படும்! அதை மறந்து, வெள்ளைக்காரனின் “குரோஜன் ஹோர்ஸ்” என்ற மாயக்குதிரையான ‘எலக்ஷன்’ முறையைப் பின்பற்றி வீண் சங்கடங்களையெல்லாம் விலைக்கு வாங்குகிறோம். பாலாவோடை அம்மனே! எங்

(3ம் கலம் பார்க்க)

# ஆட்சிபீடம் ஏறும் கட்சியுடன்-ஒப்பந்தம்-கூட்டு

# உடன்படிக்கைப் பேச்சுக்கு இனி இடமில்லை!

கொழும்பில் இப்போது சிலஇடங்களில் அரசியல் கருத்தரங்குகள் வாரந்தோறும் இடம் பெறுகின்றன.

பம்பலப்பிட்டி லோறிஸ் வீதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக்கிளை கருத்தரங்குகளை நிகழ்த்தி வருகிறது. இவைதவிர மருதானை டீன்ஸ் வீதியிலுள்ள சமூக மத நிலையத்திலும் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

இப்போது இலங்கையிலுள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் சங்கங்களும் கருத்தரங்குகளை ஆரம்பித்திருக்கின்றன

பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள், பிரமுகர்கள் இக்கருத்தரங்குகளில் பேச அழைக்கப்படுகிறார்கள். கணிசமான அளவு தொகையினர் இக்கருத்தரங்கு

## பண்டா-செல்வா ஒப்பந்தம்; தமிழ் ஈழம் பற்றி விளக்கம்

களில் பங்கு பற்றுகின்றார்கள். கொடுக்கப்பட்ட தலைப்புக்களில்பேசிமுடிந்ததும்அவையில் எழுப்பப்படும் கேள்விகள் தான் இக்கருத்தரங்குகளைச் சோபிக்கச்செய்கின்றன, பயனுள்ளவையாக்குகின்றன.

அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும், தமிழரசுக் கட்சியின் செயலாளருமான திரு. எஸ். கதிரவேற்பிள்ளை 1977-பொதுத் தேர்தல் என்ற கருத்தரங்கில், பொதுத்தேர்தலும தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனமும்' என்ற தலைப்பில் மருதானை சமூக மத நிலையத்தில் பேசினார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைச்செயல் அதிபரும் தமிழரசுக்கட்சியின் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் வெளிநாட்டுப் பத்திரிகையினர்சங்கத்தின் ஆதரவில் கொழும்பு 'தப்ரபேன்' ஹோட்டலில்பேசினார்

### சர்வஜனவாக்கெடுப்பு

சிங்களமக்களும் கலந்துகொண்ட மருதானைக் கருத்தரங்கில் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, 'கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம்' பற்றி விளக்கிக்கூறி, எதிர்வரும் பொதுத் தேர்தல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக அமையும் என்றார்.

புத்தளத்திலிருந்து பொத்துவில் வரை பண்டைய தமிழர் ஈழத்தை உள்ளடக்கிய பிரதேசத்தில் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணி, வட்டுக்கோட்டையில் நடைபெற்ற அதன் முதலாவது மாநில மாநாட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் தமிழர் சுதந்திரத்துடனும் தன்மானத்துடனும் வாழ, தாம் இழந்த தமது தனி அரசை மீண்டும் நிறுவுவதென தலைமைப்பீடம் தீர்மானித்திருக்கிறது. இதற்கான அனுமதியை பொதுசன அபிப்பிராயத்தை பெறுவதொன்றே எதிர்வரும் தேர்தலில் எம்மைப்பொறுத்தவரை ஒரே நோக்கமாகும்என க்கூறிய திரு. கதிவேற்பிள்ளை அன்னியர் வருகைக்கு முன்னர் இரு தனி ராஜ்யங்களாக இருந்த இந்நாட்டில் 400 வருட அந்நியர் ஆட்சிக்கும், 29 ஆண்டு சிங்கள பாரபட்ச ஆட்சிக்குப் பின்னர் தமிழ் மக்கள் தாம் மீண்டும் சுதந்திரமாக வாழத் தலைப்பட்டுவிட்டார்கள் என்றார்.

### முஸ்லிம்களுக்கு......

தமிழ்ப்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்கள், அவர்கள் அதிகமாக வாழும் பிரதேசத்தில் அவர்களுக்கென ஒரு ராஜ்யத்தை அமைக்கவும் தமிழர் விடுதலைக் கூட்டணி விஞ்ஞாபனம் கூறுகிறது எனக் குறிப்பிட்ட அவர், அமைக்கப் படவிருக்கும் புதிய தமிழ் ஈழ அரசு சமஷ்டி அரசமைப்பைக் கொண்டதாகவும் மதசார்பற்று, சகல மதத்துக்கும் சமத்துவம் அளிப்பதாகவும், சாதிப் பாகுபாட்டை அகற்றுவதாகவும், சோஷலிச அடிப்படையிலான பொருளாதாரத்தைக் கொண்டிருக்கும் என்றார்.

தமிழ் ஈழத்தில் பிரஜாவுரிமை கோரும் தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படும் அதே வேளை, தமிழ் ஈழத்தில் ஏற்கனவே வாழும் தமிழ்ப் பேசுவோரல்லாதவர்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்படும் என்றார்.

### "சிநேக உறவையே விரும்புகிறோம்"

திரு. கதிரவேற்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- "நாம் சிங்கள அரசுடன் சிநேக உறவையே விரும்புகிறோம்; அந்த உறவு ஏற்படுமானல், நாம் எமது சுதந்திரத்தைச் சுமுகமாகவே-இரத்தக்களரியின்றிப் பெற முடியும். எமது இளைஞர்கள் அவசியமானல் தமது சுதந்திரத்தை வென்றெடுக்க போராடுவதற்கும் தயாராகவே இருக்கிறார்கள். ஆனல், சிங்கள மக்கள் இப்பிரச்னையை நன்கு புரிந்துகொண்டால், இரத்தக் களரி ஏற்படாது இப்பிரச்னையைத் தீர்ப்பதில் உள்ள நன்மையைச் சிங்கள மக்கள் புரிந்துகொண்டால் இரத்தக்களரி ஏற்படாமலே, நாம் இரண்டு தனி ராஜ்யங்கள் அமைக்க முடியும்.

### 'மாலி'

"எங்கு வாழ்கின்ற எவருக்குமே சுதந்திரம் அவர்களுடைய உரிமை என்ற அறைகூவலையும், நிதானமாகச் சிந்திக்கும்படியாக அவர் விடுத்தார்.

### கேள்வி-பதில்

அவரது பேச்சுக்குப் பின்னர் அவரின் பேச்சின் அடிப்படையிலும், அல்லாமலும் பல கேள்விகள்-சுவாரஸ்யமான தொனிகளிலும் எழுந்தன. கேள்விகளுக்கு அமைதியாகவும்- விளக்கமாகவும்- சில வேளைகளில் நுட்பமாகவும் தனது பதில்களை அவர் அளித்தார்.

தமிழ் ஈழம் அமைப்பதற்கான அங்கீகாரத்தை, கூட்டணி மக்களிடமிருந்து இத்தேர்தலில் பெற்றுவிட்டால், அதன் பின்னர் வெற்றிபெற்றவர்கள் தமது தேசிய அரசுப் பேரவை ஆசனங்களுக்கான பதவியை உடன் ராஜினமாச் செய்வார்களா? என்ற கேள்விக்கு திரு. கதிரவேற்பிள்ளை 'இல்லை' என்று பதிலளித்தார்.

தமிழ் ஈழத்துக்கான அரசியல் சட்டத்தை இயற்றும் அரசியல் நிர்ணய சபையாக அவர்கள் இயங்குவார்கள். அதேவேளை விஞ்ஞாபனத்திலுள்ள ஏனைய கொள்கைகளை கூட்டணி தேசிய அரசுப் பேரவைக்குக் கொண்டு செல்லும். என்று சொன்ன அவரிடம், தமிழ் ஈழ அரசியல் சட்டத்தை யாப்பதற்கு உங்களுக்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று ஒருவர் கேட்க, 'நீர் எவ்வளவு காலத்தில் யாப்பீர்?' என்று திரு. கதிரவேற்பிள்ளை சிரித்துக்கொண்டே திருப்பிக் கேட்டார்.

'ஒரு நாள்' என்றார் கேள்வி கேட்டவர். "எங்களுக்கு ஒரு மாதத்துக்குமேல் ஆகும்" என்றார் திரு. கதிரவேற்பிள்ளை.

### அங்கீகாரம் கிடைக்காவிட்டால்....?

தமிழ் ஈழத்துக்கான அங்கீகாரம் மக்களிடமிருந்து எதிர்பார்க்குமளவில் கிடைக்காத பட்சத்தில் கூட்டணி அக்கொள்கையைக் கைவிடுமா? என்ற கேள்விக்கும் 'இல்லை' என்று பதிலளித்தவர், துரதிருஷ்டவசமாக அப்படி நிலை ஏற்பட்டாலும் எமது கோரிக்கையை வலியுறுத்தி மேலும் மக்களுக்கு நிலைமையை உணர்த்துவோம என்றார்.

எதிர்வரும் தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களையும், நுவரெலியா, மஸ்கேலியா, கொழும்பு மத்தி ஆகிய தொகுதிகளையும் தவிர்த்து ஏனைய தொகுதிகளில் உள்ள தமிழர் எந்தக் கட்சியை ஆதரிப்பது? என்ற கேள்விக்கு, இத்தொகுதிகள் தவிர்ந்த ஏனைய தொகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் தாம் சுதந்திரமாகவே-எக்கட்சியை வேண்டுமானலும் ஆதரிக்கலாம் என்று பதிலளித்தார் திரு. கதிரவேற்பிள்ளை.

தனிநாடு அமைக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொள்வதற்கு கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாக ஏன் தவறினீர்கள்? என்று கேட்டதற்கு-

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னமல்ல 400 ஆண்டுகளுக்கு முன்னமே தவறிவிட்டோம் என்றார்.

### இ. தொ. கா.— கூட்டணி

இ. தொ. கா. - கூட்டணி ஆதரவு பற்றி திரு. கதிரவேற்பிள்ளை குறிப்பிடுகையில்,

"இலங்கையில் சிங்களப் பிரதேசங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கூட்டணியின் கொள்கை மலையகத் தமிழருக்கும் பொருந்துமென்றும் இதனல் இ. தொ. கா.வும் கூட்டணியும் ஒன்றிணைந்துள்ளதென்றும் கூறியவர், மலையகத் தமிழர் வேண்டுமானல் தமிழ் ஈழத்தில் குடியமரலாம் என்றும் தெரிவித்தார்."


### இ. தொ. காங்கிரஸ் விளக்கம்

இ. தொ.கா.வின் தேர்தல் விஞ்ஞாபனம் பற்றி இக்கருத்தரங்கில் இ. தொ கா.வின் தொழில் தொடர்பு செயலாளர் திரு. என். விஜயசிங்கம் பேசினர்.

பெரும்பான்மை மக்களுடன் சிறுபான்மையினருக்கு சமத்துவமான உரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதே இ. தொ கா.வின் கொள்கை என்பதனை இவர் வலியுறுத்தினர்.

1948-இல் மலையகத் தொழிலாளர் அரசியல் செல்வாக்கு அற்றவர்களாக்கப்பட்டனர். 1952 லிருந்து 1970 வரை ஒரே ஒரு நியமன எம். பி. மாத்திரம் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்தார். 1970-க்கு பின்னர் அந்தப் பிரதிநிதித்துவத்தையும் அவர்கள் இழந்து விட்டனர். தங்கள் பிரதிநிதியாக திரு. அசீஸை, அவர்கள் ஏற்கவில்லை என்றும் திரு. விஜயசிங்கம் குறிப்பிட்டார்.

### நாடும் நயமும்



வேலர்: இப்ப கள்ளச்சாராயம் விற்கிறவை தொகை கூடிவிட்டதாம்.

மயிலர்: என்ன சங்கதி?

வேலர்: இப்ப ஒசியில் கிடைக்கிற சாராயப் போத்திலெல்லாவற்றையும் வைத்து யாபாரம் செய்யினம் போலே.

— சுந்தர்

### 'அமிர்' கலந்துகொண்ட கருத்தரங்கு

ஹோட்டல் தப்ரபேனில் திரு. அமிர்தலிங்கம் பேசிய கருத்தரங்கில் வெளிநாட்டுத் தூதர்கள், வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் பலர் சமுகமளித்திருந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் ஈழக் கோரிக்கைக்கானகாரணத்தைதெளிவுபடுத்தும்வகையில் திரு. அமிர்தலிங்கம் தமது பேச்சை 1619 இல் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்திலிருந்து ஆரம்பித்தார்.

என்று குறிப்பிட்ட திரு.அமிர்தலிங்கம், 1948-க்கு பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் தமிழினத்தை திட்டமிட்டு சிதைத்து வந்தன என்றும் அதன் விளைவாக மொழி, கல்வி, உத்தியோக, மத உரிமைகளை இழந்து வந்திருக்கிறது என்பதனையும் சுட்டிக் காட்டினர்.

### 'முதல் துரோக நடவடிக்கை'

இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மாறிமாறிப் பெற்றன. 1948–1955 வரை ஐ. தே. கட்சி, தமிழர்களுக்கு இழைத்த முதல் துரோக நடவடிக்கையாக பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. இதனல் மலையகத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு முந்திய தேர்தலில் 8 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட

## கொழும்பு கருத்தரங்குகளில் அமிர் - கதிரவேற்பிள்ளை

### போர்த்துக்கேயர் காலம் முதல்...

போர்த்துக் கேயரினதும் பின்னர் டச்சுக்காரரினதும் அதன் பின்னர் 1796 இல் பிரிட்டிஷாரினதும் ஆட்சிக் காலத்தில் இலங்கை இரண்டு தனி ராஜ்ஜங்களைக் கொண்டு இரண்டு இன மக்கள் வாழும் நாடாகவே இருந்திருக்கிறது. 1833 இல் ஆங்கிலேயர் தம்முடைய நிர்வாக வசதிக்காகவே இவ்விருராஜ்யங்களையும் ஒன்ருக்கி கொழும்பிலிருந்து ஆட்சிபுரியத் தொடங்கினர். பண்டைய தமிழ் ராஜ்யம் புத்தளத்திலிருந்து வடக்கு, கிழக்காக சிலாபத்தில் குப்புக்கன் ஆற்றை எல்லையாகக் கொண்டு விளங்கியது.

நிலைமாறி, ஒரு பிரதிநிதிதானும் அப்பகுதியிலிருந்துசெல்ல முடியாதநிலை ஏற்பட்டது. ஐ தே. கட்சியின் இரண்டாவது துரோக நடவடிக்கை நிருவாகச் சட்டத்தைக் கொண்டு வந்து தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தியமையாகும். இதன் விளைவே அண்மையில் திருமலையில் நடைபெற்ற கலவரம்' என்றும் திரு. 'அமிர்' குறிப்பிட்டார்.

### 'சிங்களம் மட்டும் சட்டம்'

ஐ தே. கட்சிக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்கா அரசாங்கம் சிங்களம்

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

## ஈழநாடு

### தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

### போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளிலும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப்பிடுக:-

| தொ.இல | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | .................... |
| 80. | வட்டுக்கோட்டை | .................... |
| 81. | காங்கேசன்துறை | .................... |
| 82. | மானிப்பாய் | .................... |
| 83. | கோப்பாய் | .................... |
| 84. | உடுப்பிட்டி | .................... |
| 85. | பருத்தித்துறை | .................... |
| 86. | சாவகச்சேரி | .................... |
| 87. | நல்லூர் | .................... |
| 88 | யாழ்ப்பாணம் | .................... |
| 89. | கிளிநொச்சி | .................... |
| 90. | மன்னார் | .................... |
| 91. | முல்லைத்தீவு | .................... |
| 92. | வவுனியா | .................... |
| 94. | திருகோணமலை | .................... |
| 95. | மூதூர் | .................... |
| 96. | கல்குடா | .................... |
| 97. | மட்டக்களப்பு (1) | .................... |
| | (2) | .................... |
| 98. | பட்டிருப்பு | .................... |
| 100. | சம்மாந்துறை | .................... |
| 101. | கல்முனை | .................... |
| 102. | பொத்துவில் (1) | .................... |
| | (2) | .................... |
| 103. | புத்தளம் | .................... |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| .......... | .......... | .................... |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| .......... | .......... | .................... |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| .......... | .......... | .................... |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப்பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 84. | உடுப்பிட்டி | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 85. | பருத்தித்துறை | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 97. | மட்டக்களப்பு | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல .......... ரூபா .......... இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியிடப்படும் 'ஈழநாடு தேர்தல்-77போட்டி' நிபந்தனைகளுக்கும் அதன் நடுவர் குழு''வின் தீர்மானத்துக்கும்கட்டுப்படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ..........

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காளருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக்கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையேஇப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன்ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு; (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக்குகள்= அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றுவதாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும்.

எம்.பி.யாவது எப்படி?

# போட்டியிலிருந்து ஒதுங்கலாமா?

### கட்டுப் பணத்தைச் செலுத்திய பின்னர் ஒரு வேட்பாளர் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கி விடலாமா?

ஆம்; தாராளமாக ஒதுங்கலாம்; ஆனால் தமது வேட்பாண்மையை அவர் கைவாங்க விரும்பினால் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள்தான் அவ்வாறு கைவாங்கமுடியும் என்று (withdraw the candidature) அரசப் பேரவைக் கட்டளையின் 33ம் பிரிவு கூறுகின்றது. நியமனப் பத்திரத்தைக் கோப்பிடுவதற்கென விதிக்கப்பட்ட தேதியன்று முற்பகல் 11 மணிக்கு முன் ஒருவர் தமது வேட்பாண்மையைக் கைவாங்கலாம். அதாவது தாம் தேர்தலில் வேட்பாளராக நிற்கவில்லையென்று கூறித் தேர்தலிலிருந்து விலகிக்கொள்ளலாம். இவ்வாறு விலகுவது பற்றிய எழுத்திலான அறிவித்தல் நியமனத் தேதியன்று முற்பகல் 11 மணிக்கு முன்னர் தேர்தற் பொறுப்பு உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்படுதல்வேண்டும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் அறிவித்தலைத் தேர்தற் பொறுப்பு உத்தியோகத்தர் நியமனம் சமர்ப்பிக்கப்படும் இடத்துக்கு வெளியே துலாம்பரமான ஓர் இடத்தில் உடனடியாக ஒட்டிவிடுதல்வேண்டும். அவர் செலுத்திய கட்டுப்பணம் அவரிடம் காலக்கிரமத்தில் ஒப்படைக்கப்படும்.

## சட்டமும் சமுதாயமும்

### கட்டுப்பணத்தைச் செலுத்தியபின்னர் ஆனால் நியமனத்தேதிக்கு முன்னர் ஒரு வேட்பாளர் இறந்தால்?

அப்படி எவரும் இறப்பதைக் கட்டுரை ஆசிரியன் விரும்பவில்லை. அப்படி ஒரு வேட்பாளர் இறந்தால் அது அவருடைய துர்ப்பாக்கியந்தான். ஆனால் அவருடைய கட்டுப்பணத்திற்கும் பங்கம் ஏற்படாது. அந்தக் கட்டுப்பணத்தை அவர் செலுத்தியிருந்தால் அது அவருடைய வழியுரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும். கட்டுப்பணத்தை அந்த வேட்பாளர் செலுத்தாமல் வேறுயாரேனும் செலுத்தியிருந்தால், அது அத்தகைய ஆளிடம் ஒப்படைக்கப்படும்.

பெயர் குறித்து நியமனஞ் செய்யப்பட்ட பின்னர் ஆனால், தேர்தல் தேதிக்கு முன்னர் ஒரு வேட்பாளர் இறந்தால், அவர் போட்டியிடும் தொகுதிக்கான தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறுமா? ஒத்திவைக்கப்படுமா?

இந்த வினாவுக்கான விடையை, 35-ம் பிரிவின் [4] ஆம் உட்பிரிவில் காணலாம். போட்டியுள்ள தேர்தல் [Contested Election] நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டதன் பின்னர், பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களுள் ஒருவர் இறந்தால், தேர்தல்ஆணையாளர் [Election Commissi-oner] இறந்த அந்த வேட்பாளர் எந்தத் தொகுதியில் போட்டியிட இருந்தாரோ அந்தத் தொகுதியில் ஏலவே சனாதிபதியால் நிர்ணயிக்கப்பட்ட தேதியில் தேர்தல் நடைபெறாது என்று அறிவித்தல் வெளியிடுதல்வேண்டுமென்பதுடன், அந்தத் தொகுதியில் தேர்தல் நடைபெறுவதற்கான புதியதேதியை அறிவித்தலும்வேண்டும். இந்த அறிவித்தல் கசற்றிலும் செய்தித்தாள்களிலும் வெளியிடப்படுதல்வேண்டும்.

(தொடரும்)

—செ. சிறீக்கந்தராசா
(சட்டத்தரணி)



**மனோகரா** ஜெய்சங்கர், நிர்மலா நடித்த
[யாழ்ப்பாணம்[
**அன்புச் சகோதரர்கள்**

24 முதல் சிவாஜி (இருவேடங்களில்) நடித்த
**மனிதனும் தெய்வமாகலாம்**

**வின்ஸர்** இன்று மட்டும்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள
சிவாஜி கணேசன், (இருவேடங்களில்) உஷா நந்தினி, சௌகார் ஜானகி
**மனிதனும் தெய்வமாகலாம்**
(ஈஸ்ட்மன் கலர்)
24-6-77 முதல்
காத்திருப்பேன் உனக்காக

**ஸ்ரீதர்** சிவாஜி - பத்மபிரியா
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - சகுந்தலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஸ்ரீதரின் **வைரநெஞ்சம்**
(ஈஸ்ட்மன் கலர்)

52-வது நாள்
**ராணி** எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
**நாளை நமதே**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** யாழ். நகர் தினசரி 4 காட்சிகள்
போன்; 7642
10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி விஜயா ராஜம்மா
ரங்கராவ் நடித்த
K. S. கோபாலகிருஷ்ணனின்
**செல்வம்** (புதிய பிரதி)

**REGAL** Daily: at 10-30, a. m. 2-30, 4-45, 7-00 & 9-30 p. m. only
(JAFFNA)
Dicing with Danger, Pulse Tingling Thrill - A-Minute Adventure in a Devil May care world of Cavier, Rubbling Champagne, Eye- CatchingGirls... and Ruthless Crooks.
Tony Curtis - Roger Moore - Susan George
in
**"Mission Monte Carlo"**
(Color) (Action Packed Film)

**வெலிங்டன்** ரஞ்சன்
[யாழ். நகர்] நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
**நீலமலைத்திருடன்**

**லிடோ** போன்: 7693 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்) ஜெய்சங்கர்
(புதிய பிரதி) நடித்த
**வல்லவன் ஒருவன்**

**ராஜா** 7-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) போன்: 7180
தேவரின்
**திருவருள்**
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.


# யாழ். சித்த ஆயுர்வேத மாணவர்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், வியா.

யாழ். சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி நிர்வாக அதிகாரியின் ராஜினாமாவைத் தொடர்ந்து கல்லூரி நிர்வாக சபைத் தலைவர் மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் அளித்த வாக்குறுதிகளை இருவாரங்களுக்குள் நிறைவேற்றுவதாக உறுதியளித்தார். அத்துடன் இரு வாரங்களுக்கு கல்லூரி மூடப்பட்டிருக்குமெனவும் கல்லூரி அதிபர் அறிவித்திருந்தார்.

எனினும் இரு வாரங்களுக்கு மேலாகியும் இதுவரை எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததால் இக்கல்லூரி மாணவர்கள் பெரும் அதிருப்தியும், கொந்தளிப்பும் அடைந்துள்ளார்கள். இதனால் இந்நிலையை மேலும் வளரவிட்டு மாணவர்களதும், பெற்றோர்களதும் வெறுப்புக்கும் விரக்திக்கும் ஆளாகாமல் வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றும்படி மாணவர்கள் நிர்வாகத்திடம் கேட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக முன்னர் உண்ணாவிரதமிருந்த மாணவர்கள் தங்கள் சக மாணவர்களுக்கு சுற்று நிருபமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

**அதன் விபரம் வருமாறு:-**

எமது கல்லூரி மாணவர்களுக்கு ஏற்பட்ட பொறுக்க முடியாத நஷ்டங்களுக்கும், கல்லூரிச் சீரழிவுக்கும், நிர்வாக அதிகாரியும், அவரால் தொடரப்பட்ட வழக்குகளும் காரணமாகும்.

இதனையுணர்ந்த சிந்தனையுள்ள 91 மாணவர்களின் மகஜரை முன்வைத்து, நிர்வாக அதிகாரியை ராஜினாமா செய்யும்படியும், வழக்கை வாபஸ் பெறும்படியும் கோரி சாகும்வரை உண்ணாவிரதத்தை புனிதமாக மேற்கொண்டோம்.

எங்களது போராட்டத்திற்கு தங்களினது மனப்பூர்வமான ஆதரவும், மற்றும் வைத்திய சங்கங்களினதும் தொழிற் சங்கங்களினதும் பொதுமக்களினதும் அனுதாபமும் ஆதரவும் கிடைத்தன. ஈற்றில் நிர்வாக அதிகாரி தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்தார்.

இந்நிலையில், பொதுமக்களினதும் தொழிற்சங்கப் பிரமுகர்களினதும், விரிவுரையாளர் டாக்டர் பாக்கியஜோதியினதும் வேண்டுகோளுக்கிணங்க நாம் எங்களது உண்ணாவிரதத்தைக் கைவிட்டோம்.

சபைத் தற்காலிகத் தலைவர் டாக்டர் அருளானந்தம் கல்லூரியை இரண்டு கிழமைக்கு மூடி அதற்குள் சகல பிரச்னைகளையும் தீர்த்து வைப்பதாகக் கூறியிருந்தார். ஆனால் இரண்டு கிழமைகள் முற்றுப் பெற்றும் தலைவர் ஒருவித நடவடிக்கையும் எடுத்ததாக எமக்குத் தெரியவில்லை.

இந்நிலையில் ஆகஸ்ட் 8ந் திகதி இருந்த சபை வழக்குத் தவணையை இம்மாதம் 22ந் திகதி புதன்கிழமைக்கு கனம் மாவட்ட நீதிபதி அவர்கள் பிற்போட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

மாணவர்களாகிய எங்களுக்கும் கல்லூரிக்கும் எதிர்வரும் 22ஆம் திகதி ஒரு விடிவுகாலமாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம். (கா—கி)


**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ராஜன் - பிரமிளா
**வீட்டு மாப்பிள்ளை**

**பூலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
முத்துராமன் - சுஜாதா
**வாழ்ந்து காட்டுகிறேன்**

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி—விஜயா
நடித்த
**தங்கப்பதக்கம்**

**RIO** (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
The sexiest comedy hit of the year
WARREN HITCHELL
In
**All The Sexy Way Up**
(color) (Strictly adults)


## வில்லிபாரதவிரிவுரை

யாழ்ப்பாணம், வியாழன்

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலில் நடைபெற்று வரும் மகோற்சவத்தில் தினமும் இரவு 7-மணிக்கு நல்லை ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளது பிரதம சிஷ்யன் ஊரெழு பிரமஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா பக்கவாத்திய சகிதம் வில்லிபாரதம் தொடர் விரிவுரை நிகழ்த்தி வருகின்றார்.

## பிரதமரின்—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அருந்துவதையே தடைசெய்து விட்டது? இவைதான் எங்களை வெளியேற்றக் காரணமாக அமைந்தன!

''எங்கள் நிலை தெளிவாக இருக்கிறது. இடதுசாரி ஐக்கியமுன்னணியின் கீழ்த்தான் நாட்டில் உண்மையான மக்கள் ஆட்சியை அறிமுகப்படுத்த முடியும், சோஷலிசத் திட்டங்களை அமுல் நடத்த முடியும். மக்கள் இதை உணர்ந்துவிட்டார்கள்.''

## யாழ். ஆயுர்வேதக்கல்லூரி
# நிர்வாகப் புனரமைப்பு ஆலோசனை மாநாடு

யாழ்ப்பாணம், வியா

யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரி நிர்வாக புனரமைப்பு பற்றி ஆலோசனை செய்வதற்கு நாளை மாநாடொன்று நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல் விஜயபாலா, நாளை மாலை 3 மணிக்கு இம்மாநாட்டைக் கூட்டவுள்ளார்.

இம்மாநாட்டிற்கு கல்லூரி இயக்குநர்கள், விரிவுரையாளர்கள், ஆயுர்வேத வைத்திய சபை உறுப்பினர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இம்மாநாட்டில் இக்கல்லூரி பற்றிய பல்வேறு பிரச்னைகள் பற்றி ஆராயப்படவிருக்கிறது. (க)

# 'அறிஞர்களை கௌரவிக்கவேண்டும்'

யாழ்ப்பாணம், வியா

'வித்தகம் ச. கந்தையா பிள்ளை தமிழுலகிற்கும் சைவ உலகிற்கும் செய்த தொண்டு அளப்பரியது. அவர்தம் வாழ்க்கை மாணவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு. அவருடைய வாழ்க்கை வரலாறு, எம் அனைவருக்கும் ஒரு பாடமாக அமைகிறது.' இவ்வாறு பேராசிரியர் கலாநிதி க. கைலாசநாதக் குருக்கள் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் பேணுந் திருநாளில், 'வித்தகம்' இதழாசிரியர் தென் கோவையூர் பண்டிதர் ச. கந்தையபிள்ளையின் உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரிப் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் தமிழ் மன்றத் தலைவர் செல்வன் த. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து அவர் பேசுகையில், 'மகாஜனக் கல்லூரித் தேசிய உயர் [illegible] வகுப்புக் கல்வித்துறைச் செய்திட்ட மாணவர்களும், தமிழ் மன்ற மாணவர்களும் கூட்டாகச் சேர்ந்து செய்கின்ற இம்முயற்சி பலராலும் பாராட்டப்படவேண்டியதும் ஏனையவர்களால் பின்பற்றப் படவேண்டியதுமான ஒன்றாகும். இக் கல்லூரி மாணவர்கள் முன்னோடியாகத் திகழ்வதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.' என்றார்.

கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதி 'வித்தகம் ச. கந்தையபிள்ளை' என்னும் பெயரில், கல்வித்துறைச் செய்திட்ட மாணவர்களால் வெளியிடப்பட்ட அவரது வாழ்க்கை வரலாற்று நூலின் முதற்பிரதியை வெளியிட்டு பேசுகையில், 'தமிழுணர்ச்சி மாணவர்களுக்கு இருந்தால் மட்டும் போதாது. தமிழ்-தமிழ் என்ற கோஷமிடுவதால் தமிழை நாம் வளப்படுத்தப் போவதில்லை. கந்தையபிள்ளை போன்ற பல அறிஞர்களை அறிந்து கௌரவித்து அவர் தம் படைப்புகளை தமிழ் கூறும் உலகில் பரவச் செய்ய சீரிய முறையில் தொண்டாற்ற வேண்டும்' என்று கேட்டு கொண்டார்.

யாழ். வளாக நூலகர் திரு. நா. சுப்பிரமணியஐயர் பேசுகையில், 'இன்று நடைபெறுவது போலத்திரை நீக்கங்கள் ஆண்டாண்டு தோறும் நிகழ வேண்டும். தமிழ் நாட்டில் இன்று இப்படியான அறிஞர்களைக் கௌரவிக்க மாட்டார்கள். அரசியல் ரீதியானவர்களின் படங்களையே திறப்பார்கள். இலங்கைத் தமிழர்களின் பண்பாடு அந்த வகையிலே மேம்பட்ட நயகிழ்ச்சிக்குரியது. நாவலர் பரம்பரையிலே சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தெரிவித்து வளம்படுத்தியவர் கந்தையபிள்ளை' என்றார்.

## சுண்டுக்குளி
# சனசமூகநிலைய திறப்புவிழா

யாழ்ப்பாணம், வியா

சுண்டுக்குளி சனசமூக நிலையத் திறப்புவிழா சனிக்கிழமைமாலை நடைபெறும். இத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திரு டபிள்யூ. ஏ. எல் விஜயபால கலந்து கொள்வார். அருட்திரு ஜே. ஜே. ஞானப்பிரகாசரும் அருட்திரு ஜே. பி. ச. செல்வராசாவும் சனசமூக நிலையத்தை ஆசிர்வதித்து நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார்கள். திருவாளர்கள் கு. நேசையா, ஜே. அஸ். அழகையா, வே. நடராசா மற்றும்பலர் சிறப்புரைவழங்குவார்கள்.

# ஈழநாடு

EELANADU

## ஆட்சிபீடம் ஏறும்—

(5ம் பக்கத் தொடர்ச்சி)
மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தது. அது சிங்களம் மட்டும் சட்டமாக மட்டுமல்ல, 'சிங்களவர் மட்டும் சட்டமா'கவும் இருந்தது.

பொது நிர்வாகத்தில் தமிழர் அவர்களின் சனத்தொகை அடிப்படையில் குறைந்த தொகையினராகவே சேவையில் இருந்து வருகின்றனர். இந்த விகிதாசாரம் குறைந்து கொண்டே வருகிறது.

என்று கூறியதிரு.அமிர்தலிங்கம் சுகாதார திணைக்களத்தை சேர்ந்த டாக்டர் ஜேசுதாசனை உதாரணமாகக் குறிப்பிட்டார்.

### "ஒப்பந்தம் முதல் தமிழ்ஈழத்திர்மானம் வரை"

காலஞ்சென்ற தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திரு. பண்டாரநாயக்காவுடனும், திரு. டட்லி சேனநாயக்காவுடனும் செய்த ஒப்பந்தங்களையும், திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின்கண்டியாத்திரை, 1958இல் நாட்டில் ஏற்பட்ட இரத்தக்களரி ஆகியவற்றையும் குறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம், 1970 தேர்தலுக்குப் பின்னர் அரசியல் நிர்ணயசபை அமைக்கப்பட்டமையையும் அதேவேளை தமிழர் கூட்டணி உதயமானதையும், அரசியல் நிர்ணயசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 6 அம்சக் கோரிக்கைபற்றியும், 19 தமிழ் எம். பி.க்களில் 15 பேர் அரசியல் நிர்ணயசபையை பகிஷ்கரித்தமையையும், குடியரசுப் பிரகடனத்தன்று யாழ்ப்பாணத்தில் தேசியக்கொடியை அரசியல் சட்டத்தையும் எரித்தமை, தந்தை செல்வா தனது எம். பி. பதவியைத் துறந்தமை; இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நடந்த இடைத்தேர்தலில் 75 வீத வாக்குகள் பெற்றமை; வட்டுக்கோட்டையில் 1976 மே 14ல் தமிழர் விடுதலைக்கூட்டணிஉதயமும் தமிழ் ஈழத் தீர்மானமும், பத்திரிகைத் தணிப்பும் தாங்கள் கைதுசெய்யப்பட்டதும் பின்னர், பிரபல 'ட்ரயல் அட்-பார்' வழக்கும் அதனை உலக அரங்குக்கான மேடையாக்கி திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலம், திருச்செல்வம் ஆகியோருடன் ஏனைய சட்ட அறிஞர்கள் பலரும் அரசுக்கு சவால்விடுத்து வாதாடியதையும் அரசுபின்னர்வழக்கை வாபஸ்பெற்றதையும் இவற்றுடன் தமிழாராய்ச்சிமாநாட்டுச் சம்பவத்தையும் குறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம், இந்நாட்டில்சிங்களமக்களுடன் சேர்ந்து வாழலாம் என்ற நம்பிக்கையில் கடந்த 29 ஆண்டுகளாக தாம் பெற்ற அநுபவங்களின் நிமித்தம் தமிழ் ஈழம் ஒன்றே தமது ஒரே முடிவு என்றும் அதை முன்வைத்து தமிழ் ஈழமெங்கும தாம் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதாகவும் விளக்கமாகக் கூறினர்

இந்த நாட்டில் சிங்களத்துக் தம-பௌத்தத்துக்கும் முதலிடமளித்து எப்போது இந்நாடு குடியரசாக்கப் பட்டதோ அன்று தொடக்கம் எம்மீது ஆதிக்கம் செலுத்தும் உரிமை இந்த அரசுக்குக் கிடையாது என்று குறிப்பிட்டு "நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்க நான் தயாராகவிருக்கிறேன்" என்று அமர்ந்தார். கேள்விகள் அனைத்துக்கும் சாதுரியமாகவே சில வேளைகளில் சூடாகவும் பதிலளித்தார் அமிர்.

### நிருபர்கள் கேட்ட கேள்விகள்

நிருபர் ஒருவரின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் திரு. அமிர்தலிங்கம்;

"சிங்களமக்கள்,நாம் தமிழ் நாட்டுடன் இணைந்துவிடுவோமோ என்று பயப்பட அவசியம் இல்லையென்றும் தமிழ்நாடுஅரசு மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஒரு மாநில அரசே என்றும், சர்வதேச அரங்கில் அதற்கு வல்லமை கிடையாதென்றும், திரு. கருணாநிதி அரசை மத்திய அரசு கலைத்தமையையும் கூறி எனவே சிங்கள மக்கள் நாமும் அவர்களும் இணைந்து ங்களை நாம் அழித்துவிடுவோம் என அஞ்சவேண்டியதில்லை என்று பதிலளித்தார்.

தேர்தல் முடிந்ததும் எந்த சிங்களக் கட்சியுடனாவது கூட்டுச்சேருவீர்களா? ஆட்சி அமைப்பதில் உதவுவீர்களா? ஒப்பந்தங்கள் செய்துகொள்வீர்களா? என்பவற்றை அறிந்துவிடுவதற்காக பல கோணங்களில் பலர் கேள்விகளைத் தொடுத்தபோதும், 'இல்லை' என்று திட்டவட்டமாகவே பதிலிறுத்தார்.

### "எந்தக் கட்சிக்கும் ஆதரவு இல்லை"

29 வருடகால அனுபவம் எமக்கு நிறைய உண்டு. எந்தக் கட்சியுடனும் ஒப்பந்தத்துக்கோ -உடன்படிக்கைக்கோ செல்லமாட்டோம். ஆட்சியை அமைப்பதற்காக எந்தவொரு கட்சிக்கும் நாம் ஆதரவு வழங்கமாட்டோம். எம்முடைய கொள்கைகளுக்குச் சாதகமானவற்றை அரசு கொண்டுவருகின்றபோது அவற்றை ஆதரிப்போம் என்று அவர் சொன்னர்.

"அரசியல்நிர்ணய சபைக்கு விடுத்த 6 அம்சக் கோரிக்கையும் கூட இனிமேல் எமக்கு தருவதானாலும் அவற்றையும் நாம்இனி ஏற்கப்போவதில்லை. தமிழ்ஈழம் ஒன்றுதான் எமது ஒரே லட்சியம் என்ற முடிவுக்கு நாம் வந்துவிட்டோம் என்று திட்டவட்டமாகவே கேள்வியொன்றுக்கு 'அமிர்' பதிலிறுத்தார்

கடந்த 20 ஆண்டுகளாகத் தமிழ்ப் பிரதேசங்களில் வெளி நாடுகள் அளித்த உதவியுடன் எந்தவொரு தொழிற்சாலையும் அமைக்கப்படவில்லை என்பதனைச் சுட்டிக்காட்டிய திரு அமிர்தலிங்கம் பேசாலையில் மேற்கொள்ளப்பட்ட பெற்ரோல் ஆராய்ச்சிகளிலும் சிங்களவர்களுக்கே வேலைவதி அளிக்கப்பட்டது என்ருர்.

### மகிழ்ச்சியான விஷயம்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக்கிளை கூட்டணிக்கு ஆதரவு அளிக்கிறது என்றும் இந்த முக்கியத்துவம் வாய்ந்த அம்சத்தை மகிழ்ச்சியுடன் தெரிவித்ததாகவும் கூறியவர், எனினும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடம் இன்னும் இதனை உத்தியோக பூர்வமாக ஏற்கவில்லை என்றும், அநேகமாக அவர்கள் தேர்தலை எதிர்நோக்கியிருப்பதால் இதை அங்கீகரிப்பின் அவர்கள்சில மாறுபாடான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என்பதற்காக பேசாமல் இருக்கக்கூடும் என்றும் தேர்தல்முடிந்த பின்னர் தலைமைப்பீடம் ஏற்றுக்கொள்ளுமென்றே தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேச அமைப்பாளர் திரு. வ. பொன்னம்பலத்தை,அவர் எனது அபேட்சகர் நியமனத்தை பிரேரித்தார் என் எதற்காக கட்சி அவரை தற்காலிகமாக நீக்கியிருக்கிறது என்று திரு அமிர்தலிங்கம் கூறியபோது சிரிப்பொலி எழுந்தது!

இவ்விரு கருத்தரங்குகளும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரவலான அளவில் தங்கள் கருத்துக்களை, வெளிப்படுத்த,தக்கவாய்ப்புகளாகவே இவர்களுக்கு அமைந்தன, இவ்வாய்ப்புகளை இருதலைவர்களுமே முழுமையாகப் பயன்படுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 23 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.

## சுருக்கெழுத்தாளர் பரீட்சை பகிஷ்கரிப்பு!

கொழும்பு,புதன் சுருக்கெழுத்தாளர்களுக்கு திரந்தரநிலை அளிப்பதற்கான தகுதிப் பரீட்சையை, 25 சுருக்கெழுத்தாளர்கள் பகிஷ்கரித்தனர்.

மருதானை ஆனந்தா வித்தியாலயத்தில் இப்பரீட்சை நடைபெற்றது.

சுருக்கெழுத்தின்விதிமுறைப்படி வாசிக்கப்படாமல்,வேகம் ஏற்ற இறக்கமாக வாசிக்கப்பட்டதாலும் கடந்த இருவருடங்களாக இப்பரீட்சைக்கு தோற்றியோர் எவரும் சித்திபெருமையுமே இப்பகிஷ்கரிப்புக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

நிதி அமைச்சு, பொது நிர்வாகத் திணைக்களம்,பரீட்சை ஆணையாளர், பரீட்சை மண்டப பரீட்சகர் ஆகியோருக்கு பகிஷ்கரிப்புக் காரணங்கள் பற்றி அறிவிக்கப்பட்டு ஒழுங்கான முறையில் பரீட்சையை நடத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

பரீட்சையை ஒழுங்காக நடத்த நடவடிக்கை எடுக்குமாறு, அரசாங்க தமிழ் சுருக்கெழுத்தாளர் சங்க மூலமும் கோரப்பட்டுள்ளது. (க)

## மூதூர் திருட்டு—

1 ம் பக்கத்தொடர்ச்சி
குறிப்பிட்டார்.

இவ் வழக்கில், 1973-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ம் திகதி, பஸ்ஸில் தபால் மெயில் பையை திருடமுயற்சித்ததாக ஏ. எல். சேகுதாவுத், ஏச். எம். சகிபுதம்பி, எஸ். சதாக், எம். எஸ். சாமித்தம்பி, எம். ஆர். முகமது அலி, எம். பசீர், ஏச். ரசலிபு, பி. எம். லத்திப், கே. எம். ஐத்தாறுஸ், வி. எம். நசிர் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி. விவேகானந்தன் ஆஜரானர். அரசதரப்பில் எஸ்.ஐ.பிள்ளை,மூதூர் உதவிப் பொலிஸ்அதிபர் பொன்சேகா சார்ஜன்ட் கணபதிப்பிள்ளை ஆகியோரின் உதவியுடன் ஆஜரானர்.

வழக்காளி தரப்பு சாட்சியங்கள் திருப்திகரமாக இல்லாததனுல் நீதிபதி எதிரிகளைவிடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

தீர்ப்பளிக்கையில் நீதிபதி கே. ஞானச்சந்திரன் கூறியதாவது:

பஸ் கண்டக்டரான வில்பேட் சில்வாவுக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே சச்சரவு ஏற்பட்டுள்ளது. பஸ் மூதூர், தோப்பூர் எல்லைகளைக் கடந்தபின், கண்டக்டர் அவர்களை அடித்துவிட்டு, தபால்மெயில் பைகளைத் திருடமுயற்சித்ததாக இ. போ.ச.மூலம்மூதூர் பொலிசாருக்கு புகார் ஒன்று செய்துள்ளார்.

ஸ்தலத்திற்கு விசாரணைக்கு சென்ற பொலிசார் ஏதும் அறியாமல் கூடியிருந்த பொதுமக்களை தாக்கியிருக்கின்றனர். தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அவ்வூர் உள்ளூராட்சி மன்றத் தலைவர் குறுக்கிட்டு நிலைமையை விளங்கப்படுத்தியிருக்கிருர். பொலிசார் அவரையும் முதலாவது சந்தேக நபராக்கி விளக்கமறியலில் வைத்திருக்கின்றனர்.

அங்கு விசாரணைக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ்மொழி தெரியாது: விசாரணைசெய்யப்பட்ட பொதுமக்களுக்குசிங்கள மொழிதெரியாது.இதனுலேயே உள்ளூராட்சிமன்றத் தலைவர் கூறியது பொலிசாருக்குவிளங்காமல் தாக்குதல்பெரிதானது. இவ்வழக்கு இவ்வாறு சோடிக்கப்பட்டுவந்த தென்பதற்கு சகல அத்தாட்சிகளும் வழக்கில் காணப்படுகிறது.

திருடமுயன்ற குற்றச்சாட்டுக்கு சாட்சியம் போதாது' இவ்வழக்கில் உண்மையாகவும், உறுதியாகவும் சாட்சியமளித்த கன்ஸ்டபிள் பிரந்தாவை பாராட்டுகிறேன். இப்பாரட்டை பொலிஸ் அதிபருக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடுகிறேன்.

இவர் அங்கு ஒருவருடம் மட்டும் கடமை புரிந்திருக்கின்ருர். நல்ல அனுபவம் பெற்றிருக்கிருர். வானெலி பகுதியில் அவர் கடமை புரிந்திருந்தாலும் புத்திசாலித்தனத்துடனும், பொறுப்புணர்ச்சியுடனும் நடந்திருக்கிருர். இதன் காரணமாக நிலைமை மோசமாகாமல் தடுத்து நிறுத்தப்பட்டது. அவரின் கடமையுணர்ச்சியை பாராட்டுகிறேன்.

எதிரிதளை விடுதலை செய்கிறேன். (க)

## தமிழ் ஈழம்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]
போட்டிருக்கிருர்கள் இத்தகையவர்கள் இந்த இனத்தின் விடுதலைக்காகப் பாடுபட்ட ஒரு தமிழ் தலைவனை மறந்தது ஏன்? தமிழர் வீடுதலைக் கூட்டணியினர் கோரும் தமிழ் ஈழம் இங்கு அமைக்கப்பட்டால் தமிழனைத் தமிழன்ஆள மாட்டான் தமிழனை பலாத்காரமும் வன்செயலும் தான் ஆளும். தமிழ் ஈழம் அமைக்கப்பட்டால் அதற்கு எதிரானவர்கள் இங்கு எப்படி வாழ முடியும்? தமிழ் பிரதேசங்களில் சர்வஜன வாக்கெடுப்பு என்ற போர்வையில் வடக்கு, கிழக்கு, புத்தளம் தவிர்ந்த இடங்களில் ஏன் அபேட்சகர்களை நிறுத்தவில்லை. 35 லட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர் என்கிருர்கள். ஆனல் 14 லட்சம் பேரே வடக்கிலும் ஏனையவர்கள் மற்றைய இடங்களிலும் வாழ்கிருர்கள் அப்படியானல் இது எப்படி சர்வஜன வாக்கெடுப்பாகும்? இவர்கள் எதிர்பார்க்கும் பூரண வெற்றி கிடைக்காவிட்டால் என்ன செய்யப்போகிருர்கள்?

இக் கூட்டத்தில் நூர் முகமது, சிவரத்தினம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (கா)

## கட்டடக்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பட்ட சீர்கேடுகளுக்கு நிர்வாக ஒழுங்கீனமே காரணமெனகுழுதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது. சீமெந்துவிற்பனையில் 10 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் குழுதன் அறிக்கையில் கூறியுள்ளது.

திருவாளர்கள் கே. துரைசிங்கம் வி. சி. ராஜரத்தினம், ஜே, சமரக்கோன், ஆரியவன்ஸ ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகித்தனர், (உ)

## இன்று

யாழ்ப்பாணம், வியாழன் ஏழாலை ஸ்வர்ணம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலயத்தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது.

நாளை அதிகாலை நடேசர் அபிஷேகமும் அதைத்தொடர்ந்து தீர்த்தோற்சவமும் நடைபெறும். (உ)

## மர்மம ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
கடந்த இரவுவரை இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

இதுபற்றிய பொலிசாரின் புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட குழந்தையின் அன்னை தொடர்ந்தும் ஆஸ்பத்திரியிலேயே இருந்துவருகிருர். (உ)

## உடுப்பிட்டி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
மாகாணங்களில் தமிழர் விடுதலைக்கூட்டணி 25 தொகுதிகளில் போட்டியிடுகின்றது'

"இந்த 25 தொகுதிகளில் 24 தொகுதிகளில் வெற்றி ஈட்டி உடுப்பிட்டித் தொகுதியில் தோல்வி அடைந்தால் உலக நாடுகளுக்கு என்ன பதில் கூறுவது? சாதி அடிப்படையில் தான் தோல்வி என்ருல் உலகம் ஏற்குமா? இந்நிலையால் தமிழர்கள் எவ்வாறு சுதந்திரம் பெறமுடியும் என்று தான் உலகநாடுகள் எம்மைக்கேட்கும். உடுப்பிட்டித் தொகுதியின் வெற்றி தான் தமிழர்களின் வெற்றி" என்று கூறினர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம், அமரர் செல்வநாயகம் ஆகியோரின் மறைவுக்கு இருநிமிட மௌனஞ்சலி செலுத்தப்பட்டது.

## வன்செயல்கள்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]
பல வேட்பாளர்களும் தத்தம் கொள்கைகளை விளக்கக்கூடியதாக இருக்குமென்றும் வன்செயல்கள் ஜனநாயகப் பண்பற்றவை என்றும் நல்ல எண்ணம்கொண்ட மக்களால் இவை நிறுத்தப்படவேண்டிய தவசியமென்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

## பிரதமருடன்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நிலவரங்களைப் பற்றி சம்பாஷித்ததாகத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை முடிவுகளை அவர் வெளியிட மறுத்துவிட்டார்.

### பாண்டிச்சேரி கவர்னர்

இதே நேரம் இன்று புதுடில்லியில் இருந்து சென்னை வந்த பாண்டிச்சேரி கவர்னர் திரு. குல்கர்ணி "பாண்டிச்சேரியில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியமைப்பதற்குரிய வாய்ப்பு உண்டு என்ற கருத்து நிலவுகிறது" என்று நிருபர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. குல்கர்ணி பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து பாண்டிச்சேரி ஆட்சியமைப்புப் பற்றி பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

பாண்டிச்சேரியில் உள்ள 30 சட்டசபைத் தொகுதிகளில் அ. இ. அ. தி. மு. கவுக்கு 14 ஸ்தானங்கள் உள்ளன. தமக்கு ஒரு சுயேச்சை உறுப்பினரின் ஆதரவும் உண்டு என்று அ. இ. அ. தி. மு க. கூறுகிறது. (உ)